# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1828/9 - 2013 සැප්තැම්බර් මස 17 වැනි අඟහරුවාදා - 2013.09.17

*1828/9 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

அறிவித்தல்

இரட்டை வரி விதிப்பு மற்றும் அரசிறை ஏய்ப்புத் தவிர்ப்பு தொடர்பில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இந்திய குடியரசிற்கும் இடையில் 2013.01.22 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இரு தரப்பு ஒப்பந்தத்திற்கு 2013.07.26 ஆந் திகதிய தீர்மானத்தின்படி, பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது என 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 97 (1) (ஆ) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகிறேன்.

பீ. பி. ஜயசுந்தர,
செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2013, செத்தெம்பர் 16.

**அட்டவணை**

**இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக் கழிப்பதைத் தடுப்பதற்குமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்திய குடியரசு அரசாங்கத்திற்கும் இடையிலான உடன்படிக்கை**

இந்திய குடியரசு அரசாங்கமும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கமும் இரட்டைவரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக் கழிப்பதைத் தடுப்பதற்கும் மற்றும் இருநாடுகளுக்கு இடையில் பொருளாதார ஒத்துழைப்பினை மேம்படுத்திக் கொள்ளும் நோக்குடன் பின்வருமாறு உடன்பட்டுள்ளன.

**உறுப்புரை 1**

உள்ளடக்கப்படும் ஆட்கள்

இவ்வுடன்படிக்கை ஒப்பந்த அரசொன்றில் அல்லது இரண்டிலும் வதியும் ஆட்களுக்கு ஏற்புடைத்தாகும்.

**உறுப்புரை 2**

உள்ளடக்கப்படும் வரிகள்

1. இவ்வுடன்படிக்கை ஒப்பந்த அரசின் சார்பில் அல்லது அதன் அரசியல் உபபிரிவுகளில் அல்லது அதன் உள்ளூர் அதிகார சபைகள் சார்பில் வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரிகள் மீது அவை அறவிடப்படும் முறை எவ்வாறிருப்பினும், அவற்றிற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

2. அசையும் அல்லது அசைவற்ற ஆசனத்தின் பராதீனத்தின் மூலம் பெறப்படும் இலாபங்கள் மீதான வரிகள் மற்றும் தொழில் முயற்சிகளால் செலுத்தப்பட்ட கூலிகள் அல்லது சம்பளங்களின் மொத்தத்தொகை மீதான வரிகள் உட்பட மொத்த வருமானம் மீது அல்லது வருமானத்தின் கூறுகள் மீது விதிக்கப்படும் சகல வரிகளும் வருமானம் மீதான வரிகளாகக் கருதப்படும்.

3. இவ்வுடன்படிக்கை ஏற்புடைத்தாகும் வரிகளாவன -

(அ) இந்தியாவில் :- வருமானவரி மீதான ஏதேனும் மேலதிக கட்டணத்துடன் கூடிய வருமானவரி இதனகத்துப்பின்னர் "இந்திய வரி" என்று குறிப்பிடப்படும் ;

(ஆ) இலங்கையில் :-

முதலீட்டுச் சபையினால் உத்தரவளிக்கப்பட்டு தொழில் முயற்சிகளின் மொத்த விற்பனவு அடிப்படை மீதான வருமானவரி உட்பட வருமானவரி (இதனகத்துப் பின்னர் "இலங்கை வரி" எனக் குறிப்பிடப்படும்).

4. இவ்வுடன்படிக்கையானது வழக்கிலுள்ள வரிகளைவிட ஏதேனும் மேலதிக அல்லது அவற்றிற்குப் பதிலாக உடன்படிக்கை கையொப்பமிட்ட திகதியின் பின்னர் விதிக்கப்படும் ஏதேனும் ஒத்த வரிகளுக்கு அல்லது கணிசமானளவு ஒத்த வரிகளுக்கு ஏற்புடைத்தாகும். ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் தத்தமது வரிச்சட்டங்களில் முக்கிய மாற்றமெதுவும் ஏற்படின் அவைபற்றி ஒருவருக்கொருவர் அறிவித்தல் வேண்டும்.

**உறுப்புரை 3**

பொது வரைவிலக்கணங்கள்

1. இந்த உடன்படிக்கையில் சந்தர்ப்பம் வேறு விதமாக தேவைப்படுத்தினாலன்றி -

(அ) "இந்தியா" என்ற சொல் சமுத்திரச் சட்டம் தொடர்பாக ஐ. நா. ஒப்பந்தம் உட்பட சர்வதேச சட்டம் தொடர்பாக இந்திய சட்டத்துக்கமைய இந்தியாவின் நியாயாதிக்கம், இறையாண்மை உட்பட வேறு உரிமைகள் மற்றும் நீதிமன்றம் போன்ற வேறு ஏதேனும் கடற்போக்குவரத்து பிராந்திய மற்றும் ஆட்புலக் கடலுட்பட அதற்கு மேலாக உள்ள விண்வெளியிடம் உட்பட இந்தியாவுக்குரிய நிலப் பிரதேசத்தைக் குறிக்கும் ;

(ஆ) "இலங்கை" என்ற சொல் அனைத்துலகச் சட்டத்திற்கும் அதன் தேசிய சட்டவாக்கங்களுக்கும் இணக்கமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் இறையுரிமைகளையும் நியாயாதிக்கத்தினையும் பிரயோகிக்கும் அல்லது இதனகத்துப்பின் பிரயோகிக்கவுள்ள நிலப் பிராந்தியம் உள்ளகக் கடல்கள் அத்துடன் ஆட்புலக் கடலுக்கு மேலாகவுள்ள விண்வெளியிடம் அத்துடன் பிரத்தியேக பொருளாதார வலயம் கண்டமேடு உட்பட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்குரிய தேச எல்லைகளைக் குறிக்கும் ;

(இ) "ஒப்பந்த அரசு" - "மற்றைய ஒப்பந்த அரசு" என்பது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு இந்திய குடியரசு அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு என்ற பொருள்படும் ;

(ஈ) "ஆளொருவர்" என்பது தனியாளொருவரை கம்பனியொன்றினை ஆட்கள் குழுவொன்றை குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் வலுவிலிருக்கும் வரிவிதிப்பு சட்டத்தின் கீழ் வரி விதிப்பு அலகாகக் கருதப்படும் வேறு ஏதேனும் நிறுவனத்தைக் குறிக்கும் ;

(உ) "கம்பனி" என்ற சொல் கூட்டிணைந்த குழுவெதுவும் அல்லது வரி நோக்கங்களுக்காக கூட்டிணைந்த குழுவாகக் கருதப்படும் அமைப்பெதுவுமெனப் பொருள்படும் ;

(ஊ) "தொழில் முயற்சி" என்ற சொல் ஏதேனும் தொழில் முயற்சியொன்றை முன்னெடுத்து நடத்தல் என்ற பொருள்படும் ;

(எ) "ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சி" "மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்று" எனும் சொற்களை முறையே ஒப்பந்த அரசொன்றில் வதிபவராற் கொண்டு நடாத்தப்படும் தொழில் முயற்சியொன்று எனவும் மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவராற் கொண்டு நடாத்தப்படும் தொழில் முயற்சியொன்று எனவும் பொருள்படும் ;

(ஏ) "சர்வதேசப் போக்குவரத்து" எனும் சொல் கப்பல் அல்லது வானூர்தி ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியயொன்றால் மற்றைய ஒப்பந்த அரசிலுள்ள இடங்களுக்கிடையில் மட்டும் இயக்கப்படும் சந்தரப்பங்களைத் தவிர ஒப்பந்த நாட்டில் கொண்டுள்ள ஏதேனும் போக்குவரத்து எனப் பொருள்படும்.

(ஐ) "தகுதிவாய்ந்த அதிகாரி" என்ற சொல் -

(i) இந்தியாவில் இந்திய அரசின் நிதி அமைச்சர் அல்லது அதன் அதிகாரம்பெற்ற பிரதிநிதியொருவர் ;

(ii) இலங்கையில் - உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதியைக் குறிக்கும்.

(ஒ) "நாட்டினத்தவர்" என்ற சொல் -

(i) ஒப்பந்த அரசொன்றின் தேசிய இனத்தைக் கொண்டுள்ள எவரேனும் தனியாள் ;

(ii) ஒப்பந்த அரசில் நடைமுறையிலுள்ள சட்டங்களினால் தகுதி நிலைமைப்பெறும் எவரேனும் சட்டமுறையான ஆட்கள், பங்குடமை, சங்கம் எனப் பொருள்படும் ;

(ஓ) "வரி " என்ற சொல் சந்தரப்பத்திற்கேற்ப இலங்கை அல்லது இந்திய வரி என பொருள்படுவதுடன், இவ் ஒப்பந்தம் உரியதாகின்ற வரிகளில், ஏதேனும் தவறுகை அல்லது தவிர்ப்பு தட்டிக் கழித்தல் தொடர்பாக செலுத்தவேண்டிய அல்லது அவ்வரிகளுக்கு உரியதாக விதிக்கப்பட்டுள்ள தண்டம் அல்லது குற்றப் பணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏதேனும் தொகை உள்ளடங்கி இருத்தல் ஆகாது ;

(ஔ) "அரசிறை ஆண்டு " என்ற சொல் -

இந்தியா தொடர்பில் : ஏப்பிறல் 1 ஆந் திகதி ஆரம்பிக்கின்ற நிதியாண்டு -
இலங்கைத் தொடர்பில் : ஏப்பிறல் 1 ஆந் திகதி ஆரம்பிக்கின்ற மதிப்பீட்டாண்டு எனப் பொருள்படும்.

2. ஒப்பந்த அரசொன்று ஏதேனும் சந்தர்ப்பம் ஒன்றில் உடன்படிக்கை ஏற்பாடுகளை பிரயோகப்படுத்துவது தொடர்பாக, அங்கு வரைவிலக்கணம் கூறப்படாத சொல்லெதனையும் சந்தர்ப்பத்திகேற்ப வேறு வித்தத்தில் விளங்கிக் கொள்ளும் தேவை ஏற்பட்டாலே அன்றி, இவ்வொப்பந்தத்திற்கு உரிய வரி அலுவல்களுக்காக அந்த அரசின் சட்டங்களின் கீழ் அப்போதைக்கு கொண்டிருந்த கருத்தையே கொள்ள வேண்டியதுடன் அவ்வரசின் ஏற்புடைய வரிச் சட்டங்களின் கீழ் கொண்டுள்ள எதேனும் கருத்து அவ்வரசின் மற்றைய சட்டங்களின் கீழ் அதே சொல்லுக்கு கொடுக்கப்பட்டுள்ள கருத்தினை மீறி அமுல்படுத்தல் வேண்டும்.

**உறுப்புரை 4**

வதிவாளர்

1. இவ்வுடன்படிக்கையின் நோக்கங்களுக்காக "ஒப்பந்த அரசொன்றில் வதிபவர்" என்பது அவ்வரசின் சட்டங்களின்கீழ் அவரது குடியியல், வதிவு, கூட்டிணைந்த பதிவு செய்யப்பட்ட இடம், முகாமைத்துவ நிலையம் அல்லது ஒத்த தன்மைத்தான வேறு ஏதேனும் பிரமாணத்தின் காரணமாக அங்கு வரிவிதிப்பிற்குள்ளாகின்ற ஆள் எவரும் எனப் பொருள்படும். அத்துடன் அரசு மற்றும் ஏதேனும் உள்ளடக்கும், இந்த வகையில் அந்த அரசிலுள்ள வளங்களிலிருந்து பெறும் வருமானம் அரசியல் உபபிரிவு அல்லது அதன் உள்ளூராட்சி அதிகாரசபை என்பவற்றையும் உள்ளடக்கும். எவ்வாறாயினும் அந்த அரசில் இருந்து கிடைக்கும் வருமானங்கள் மாத்திரம் தொடர்பில் அவ்வரசில் வரிவிதிக்குட்பட்ட ஆள் எவரும் இதில் உள்ளடக்கப்படமாட்டார்கள்.

2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் காரணத்தால் எவரேனும் ஆளொருவர் இரு ஒப்பந்த அரசுகளிலும் வதியுமிடத்து அவரது நிலை பின்வருமாறாக நிருணயிக்கப்படும் -

(அ) அவர் நிரந்தரமான மனையொன்றை எவ்வொப்பந்த அரசில் வைத்திருக்கின்றாரோ அவ்வரசில் வதிபவராகக் கருதப்படுவார். அவருக்கு இரண்டு ஒப்பந்த அரசுகளிலும் கிடைத்த நிரந்தர மனை உள்ளவிடத்து அவருடைய தனிப்பட்ட உறவுகளும் பொருளாதார உறவுகளும் எவ்வொப்பந்த அரசில் மிக நெருக்கமாக உள்ளனவோ, அவ்வரசில் (முக்கிய நலன்களின் மத்திய நிலையம்) வதிபவராக அவர் கருதப்படுவார் ;

(ஆ) அவர் தமது முக்கிய நலன்களுக்குரிய மத்திய நிலையத்தை வைத்திருக்கும் ஒப்பந்த அரசைத் தீர்மானிக்க முடியாதிருப்பின் அல்லது இரு அரச ஒப்பந்தங்களிலும் அவருக்குக் கிடைக்கக்கூடிய நிரந்தர மனையொன்று இல்லாதிருப்பின் அவர் தனது வழக்கமான வதிவிடத்தை வைத்திருக்கும் ஒப்பந்த அரசில் வதிபவராகக் கருதப்படுவார் ;

(இ) அவர் வழமையான வதிவிடமொன்றினை இரு அரசுகளில் வைத்திருப்பின் அல்லது இரண்டிலும் இல்லாதவிடத்து அவர் நாட்டினத்தவராகவுள்ள அரசின் வதியுநராகக் கருதப்படுவார் ;

(ஈ) ஆளொருவர் இரு ஒப்பந்த அரசுகளின் தேசிய இனத்தவராக இருப்பின் அல்லது இல்லாதவராக இருப்பின் ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் இருவாயினொத்த உடன்பாட்டின் மூலம் அப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டும்.

3. 1ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணக்கமாக தனியார் தவிர்ந்த ஆளொருவர் இரு ஒப்பந்த அரசுகளிலும் வதியுமிடத்து அதன்போது அதன் தொழிற்பாட்டு முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ள ஒப்பந்த அரசில் மட்டும் வதியுனர் என்று கருதப்படல் வேண்டும். தொழில்பாட்டு முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ள அரசை தீர்மானிக்க முடியாவிட்டால் ஒப்பந்த அரசுகளில் தகுதிவாய்ந்த அதிகாரிகள் பரஸ்பர உடன்பாட்டுடன் பிரச்சினையை தீர்க்க வேண்டும்.

**உறுப்புரை 5**

*நிரந்தரத்தாபனம்*

1. இவ்வுடன்படிக்கையின் நோக்கங்களுக்காக "நிரந்தரத்தாபனம்" என்னும் சொல் முயற்சியொன்றின் தொழில் முழுதாக அல்லது பகுதியாக கொண்டு நடாத்தப்படும் நிலையான தொழில் இடமொன்று எனப் பொருள்படும்.

2. "நிரந்தரத்தாபனம்" என்னும் சொல் விசேடமாகப் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது -

(அ) முகாமை இடமொன்று ;

(ஆ) கிளையொன்று ;

(இ) பணிமனையொன்று ;

(ஈ) தொழிற்சாலையொன்று ;

(உ) வேலைத்தளமொன்று ;

(ஊ) சுரங்கமொன்று, எண்ணெய் அல்லது வாயுக்கிணறு, குதம் அல்லது இயற்கை வளங்களைப் பிரித்தெடுக்கும் வேறு ஏதேனும் இடம் ;

(எ) விவசாய பண்ணையொன்று, பெருந்தோட்ட அல்லது விவசாய, வனச்செய்கை பெருந்தோட்டம் அல்லது அத்துடன் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வேறு இடம் ;

(ஏ) விற்பனை நிலையம் ;

(ஐ) வேறு நபர்களுக்கு களஞ்சிய வசதிகளை வழங்கும் ஆளொருவர் தொடர்பான களஞ்சியசாலை.

3. இது போன்று "நிரந்தரத்தாபனம்" என்னும் சொல் பின்வருவனற்றையும் உள்ளடக்கும் -

(அ) கட்டிட நிலமொன்று கட்டிட நிர்மாணமொன்று, கோர்த்தமைக்கும் அல்லது நிறுவும் கருத்திட்டமொன்று அல்லது துளையிடல் மேடையொன்று அல்லது அதனோடு தொடர்புடைய மேற்பார்வை நடவடிக்கைகளுட்பட்ட எனினும் அவ்வேலைத்தளம், கருத்திட்டம் அல்லது தொழிற்பாடுகள் ஏதேனும் 183 நாட்களுக்கு கூடிய காலம் இருந்தால் மட்டும்;

(ஆ) தொழில் முயற்சியொன்றினால் பணியாளருடாக அல்லது அத்தகைய நோக்கத்திற்காக தொழில் முயற்சியொன்றினூடாக ஈடுபடுத்தப்படும் வேறெந்த ஆளணியினருக்கூடாகவும் வழங்கப்படும் ஆலோசனைச் சேவைகள் உட்பட்ட சேவைகள் அந்த இயல்பினதாக சேவைகள் அதே திட்டத்திற்கு அல்லது தொடர்பானதொரு திட்டத்திற்கு அந்நாட்டிற்கு பன்னிரண்டு மாத காலமெதிலும் கூட்டு மொத்தமாக 90 நாட்களுக்கு அதிகப்படும் காலத்திற்கு அல்லது காலங்களுக்கு தொடர்ந்து ஆற்றப்படுமிடத்து அச்சேவைகள்.

4. இந்த உறுப்புரையின் முற்போந்த எற்பாடுகளைப் பொருட்படுத்தாது "நிரந்தரத்தாபனம்" என்னும் சொல் பின்வருவனவற்றை உட்படுத்தமாட்டாது.

(அ) முயற்சியொன்றுக்குரிய பொருட்கள், வணிகப்பொருட்களின் களஞ்சியப்படுத்தல், காட்சிப்படுத்தல் அல்லது ஆகிய நோக்கத்திற்காக மட்டும் வசதிகளைப் பயன்படுத்தல் ;

(ஆ) களஞ்சியப்படுத்தல், காட்சிப்படுத்தல், ஆகிய நோக்கத்திற்காக முயற்சியொன்றிற்குரிய பொருட்களின் அல்லது வணிகப்பொருட்களின் இருப்பொன்றைப் பேணுதல் ;

(இ) மற்றொரு முயற்சியினால் பதனிடும் நோக்கத்திற்காக மட்டும் முயற்சியொன்றின் பொருட்களின் அல்லது வணிகப் பொருட்களின் இருப்பொன்றைப் பேணுதல் ;

(ஈ) இத்தொழில் முயற்சிக்காக பொருட்களை அல்லது வணிகப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக மட்டும் அல்லது முயற்சிக்காகத் தகவல் சேகரிப்பதற்காக மட்டும் நிலையான தொழில் இடமொன்றைப் பேணுதல் ;

(உ) இத்தொழில் முயற்சிக்காக ஆயத்தமுறை இயல்பினதாக அல்லது துணைத் தன்மையிலான வேறெந்த தொழிற்பாடுகளின் மேற்கொள்ளுகை நோக்கத்திற்காக மட்டும் நிலையான தொழிலிடமொன்றைப் பேணுதல் ;

(ஊ) (அ) தொடக்கம் (உ) வரையிலான துணைப்பந்திகளில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் கலந்த தன்மையிலான காரியங்களுக்காக மாத்திரம் நிரந்தர தொழில் இடமொன்றை பேணுதல் எவ்வாறு எனினும் இவ்வாறான கலந்த தன்மை காரணமாக நிலையான தொழில் இடமொன்றின் முழுமையான ஆரம்ப அல்லது துணை தன்மையாக இருத்தல் வேண்டும் ;

5. 7 ஆம் பந்தி ஏற்புடைத்தாகும் சுதந்திர தகுதி நிலையுடைய முகவர் தவிர்ந்த ஆளொருவர் மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியின் சார்பில் ஒப்பந்த அரசொன்றில் தொழில் முயற்சியில் ஈடுபடுபவராக செயற்படின் அந்நபர் தொழில் முயற்சிக்காக மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகள் தொடர்பாகவும், அந்த தொழில் முயற்சி முதற்கூறிய ஒப்பந்த அரசில் நிரந்தர நிறுவனமுடையதாக கருதப்படுதல் வேண்டும்.

(அ) அத்தகைய ஆளின் நடவடிக்கைகள் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறாக மட்டுப்படுத்தப்பட்டிருப்பின் நிலையான தொழில் இடமொன்றின் மூலமாக பிரயோகிக்கப்படின், அந்த பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் இந்த நிலையான தொழில் இடத்தினை நிரந்தர தாபனமொன்றாக ஆக்கமாட்டாது என்பதை தவிர்ந்த தொழில் முயற்சியின் சார்பாக ஒப்பந்தங்களை கலந்துகொள்ளும் அதிகாரமுடையவரும் அந்த ஒப்பந்த அரசில் அந்த அதிகாரத்தை வழமையாக பிரயோகிப்பவருமான ஆளொருவர் ; அல்லது

(ஆ) அத்தகைய அதிகாரமெதுவுமின்றி முதற் குறிப்பிடப்பட்ட அரசில் பொருட்களின் அல்லது வணிகப் பொருட்களின் கையிருப்பை வழமையாக வைத்திருந்து, அதிலிருந்து பொருட்களை அல்லது வணிகப் பொருட்களை தொழில் முயற்சியின் சார்பில் ஒழுங்காக வழங்கும் ஆளொருவராக இருப்பார் ;

(இ) அதனால் பூரணமாக அல்லது முழுமையாக கட்டுப்படுத்தப்படும் அல்லது கட்டுப்படுத்த ஆர்வமுள்ள அல்லது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட தொழில்முயற்சி மற்றும் பிற தொழில் முயற்சிகளுக்கு முதலில் குறிப்பிடப்பட்ட கட்டளைகளை இயல்பிலேயே பாதுகாப்பவராக இருப்பார் ;

6. இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகள் எது எவ்விதமிருப்பினும் ஒப்பந்த அரசொன்றின் காப்புறுதித் தொழில் முயற்சியொன்று மீள் காப்புறுதி தொடர்பில் தவிர அந்த மற்றைய அரசின் ஆட்புலத்தில் கட்டுப்பணங்களைச் சேகரிப்பின் அல்லது அங்கமைந்துள்ள ஆபத்துக்களுக்கு 7 ஆம் பந்தி ஏற்புடைத்தாகும் சுதந்திர நிலையையுடைய முகவரியல்லாத ஒருவர் மூலமாக காப்புறுதி வழங்கின் அது அந்த மற்றைய ஒப்பந்த அரசில் ஒரு நிரந்தரத் தாபனத்தைக் கொண்டுள்ளதாகக் கருதப்படும்.

7. தரகர், பொதுத்தரகு முகவர் அல்லது சுதந்திரமான நிலையையுடைய வேறு எவரேனும் முகவர் மூலமாக ஒப்பந்த அரசில் வியாபாரத்தைக் கொண்டு நடத்துவதால் மாத்திரம் அவர் தனது வியாபாரத்தின் சாதாரண வேலையின் போது செயலாற்றுகின்றவிடத்து ஒரு ஒப்பந்த அரசில் உள்ள தொழில் முயற்சி மற்றைய ஒப்பந்த அரசில் நிரந்தரத் தாபனமொன்றைக் கொண்டுள்ளதாகக் கருதப்படமாட்டாது. எவ்வாறெனினும், அத்தகைய முகவர் ஒருவர் அந்தத் தொழில் முயற்சிக்காக முன்னுரிமை வழங்கி செயல்பட்டுள்ளபோதும், முழுமையாக அல்லது கிட்டத்தட்ட முழுமையாக இப்பந்தியின் கருத்திற்குள் அவர் சுதந்திர நிலையான ஒரு முகவராக கருதப்படல் ஆகாது.

8. ஒப்பந்த அரசொன்றின் வதியும் கம்பனியொன்று மற்றைய அரசில் உள்ள வதியும் கம்பனியொன்றினைக் கட்டுப்படுத்துகின்றதென்பதால் அல்லது மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் கம்பனியொன்றினால் கட்டுப்படுத்தப்படுகின்றதென்பதால் அல்லது மற்றைய அரசியல் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்றதென்பதால் (அது நிரந்தரமான தாபனமொன்றினால் நடாத்தப்படினும் அல்லது வேறுவிதமாக நடாத்தப்படினும்) மட்டும் அக்கம்பனியில் எதுவும் மற்றதன் நிரந்தரத்தாபனமாக ஆகாது.

**உறுப்புரை 6**

அசைவற்ற ஆனத்திலிருந்தான வருமானம்

1. மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள அசைவற்ற ஆதானத்திலிந்து ஒப்பந்த அரசொன்றில் வதிபவரால் பெறப்படும் வருமானம் அந்த மற்றைய அரசில் வரிவிதிக்கப்படலாம்.

2. "அசைவற்ற ஆதனம்" என்ற சொல்லிற்குக் குறிப்பிட்ட ஆதனம் அமைந்துள்ள ஒப்பந்த அரசின் சட்டங்களின்படி, வரைவிலக்கணம் கூறப்படும். எனினும் இச்சொல், அசைவற்ற ஆதனத்தின் கருவியாயமைந்த ஆதனம், விவசாயத்திலும், காட்டுத்தொழில் போன்றவற்றிலும் பயன்படுத்தப்படும் கால்நடைகள், கருவிகள் காணி ஆதனம் தொடர்பான பொதுச் சட்டத்தின் ஏற்பாடுகள் பொருந்துகின்ற உரிமைகள் உள்ளடக்கும் அசைவற்ற ஆதனத்தின் நுகர்வுரிமை, கனிப்பொருட்படிவுகள், மூலவளங்கள் ஏனைய இயற்கை மூலவளங்கள் என்பவற்றின் இயக்கத்திற்காக அல்லது இயக்கும் உரிமைக்கான கைமாறாகக் கிடைக்கும் வேறுபாடும் அல்லது நிலையான கொடுப்பனவு என்பனவும் அசைவற்ற ஆதனமாகக் கருதப்படும் கப்பல்கள், படகுகள், வானூர்தி என்பன அசைவற்ற ஆதனமாகக் கருதப்படலாகாது.

3. இவ் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் அசைவற்ற ஆதனத்தின் நேரடிப்பாவனை, வாடகைக்கு விடுதல் அல்லது விதத்திலான பாவனையிலிருந்து பெறும் வருமானத்திற்கும் ஏற்புடைத்தாகும்.

4. இவ் உறுப்புரையின் 1 ஆம், 3 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் தொழில் முயற்சியொன்றின் அசைவற்ற ஆதனத்திலிருந்து பெறப்படும் வருமானத்திற்கும், சுதந்திரமான தனிப்பட்ட சேவைகளை ஆற்றுவதற்காகப் பயன்படுத்தப்படும் அசையாச் சொத்திலிருந்தும் பெறும் வருமானத்திற்கும் ஏற்புடைத்தாகும்.

**உறுப்புரை 7**

தொழில் இலாபங்கள்

*1.* ஒப்பந்த அரசின் தொழில்முயற்சியின் இலாபங்கள் அந்த மற்றைய அரசில் அங்கமைந்துள்ள நிரந்தரத் தாபனமொன்றினூடாக வியாபாரத்தைக் கொண்டு நடாத்தினாலன்றி அவ்வொப்பந்த அரசில் மட்டுமே வரிவிதிக்கப்பட வேண்டும். அம்முயற்சி மேற்சொல்லப்பட்டவாறு வியாபாரத்தைக் கொண்டு நடத்தின், அந்நிரந்தரத் தாபனத்திற்கு சாட்டத்தக்கதானவை மீது மாத்திரமே வரி விதிக்கப்படலாம்.

*2. 3* ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, ஒப்பந்த அரசொன்றின் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் அங்கு அமைந்துள்ள நிரந்தரத் தாபனமொன்றினூடாக வியாபாரத்தைக் கொண்டு நடாத்துமிடத்து ஒத்த அல்லது இணையான நிபந்தனைகளின் கீழ் ஒத்த அல்லது இணையான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள தெளிவான தனியானதொரு முயற்சியாக, அது நிரந்தரத் தாபனமாகவுள்ள முயற்சியுடன் முழு சுயேச்சையுடன் தொடர்பு வைத்திருக்கும் முயற்சியாக இருப்பின் அது பெறுமென எதிர்பார்க்கக்கூடிய இலாபங்கள் ஒவ்வொரு ஒப்பந்த அரசிலும் அவ்வரசிற்கே உரித்தாக்கப்பட வேண்டும்.

*3.* நிரந்தரத் தாபனமொன்றின் இலாபங்களைத் தீர்மானிக்குமிடத்து நிரந்தர தாபனத்தின் நோக்கங்களுக்காக உண்டான நிறைவேற்றல் செலவுகள் பொது நிர்வாகச் செலவுகள் ஆகியன உட்பட செலவுகள் அந்நிரந்தரத் தாபனம் சுயேச்சைத் தன்மையான முயற்சியொன்றாக இருப்பின் அவை நிரந்தரத் தாபனம் அமைந்துள்ள இடத்தில் எனினும் சரி வேறெவ்விடத்தில் எனினும் சரி அந்தந்த அரசுகளின் வரிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைய அவற்றுக்கு உட்பட்டு கழிவுகளாக அனுமதிக்கப்படலாம். எவ்வாறெனினும், நிரந்தரத் தாபனத்தினால் தொழில் முயற்சியொன்றின் தலைமை அலுவலகத்திற்கு அல்லது அதன் வேறு அலுவலகங்களிற்கு, வேத்துரிமைகள் என்ற முறையில் ஆக்கவுரிமை அல்லது வேறு உரிமைகளின் பாவனைக்கான கட்டணங்கள் அல்லது வேறு ஒத்த கொடுப்பனவுகள் அல்லது குறிப்பிட்ட சேவைகள் ஆற்றியமைக்கான தரகாக அல்லது முகாமைத்துவத்திற்காக அல்லது வங்கித்தொழில், தொழில் முயற்சியின் விடயம் தவிர நிரந்தரத் தாபனத்திற்கு வழங்கப்பட்ட பணத்திற்கான வட்டிகள் என்ற முறையில் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகைகள் (உண்மைச் செலவுகளின் மீள் அமைப்பினைத் தவிர) தொடர்பில் கழிவுகளெதுவும் அனுமதிக்கப்படமாட்டா. அதேபோன்று நிரந்தரத் தாபனமொன்றின் இலாபங்களைத் தீர்மானிக்கையில், நிரந்தரத் தாபனத்தினால், தொழில் முயற்சியின் தலைமை அலுவலகத்திற்கு அல்லது அதன் வேறு ஏதேனும் அலுவலகங்களிற்கு, ஆக்கவுரிமை அல்லது வேறு உரிமைகளுக்காக மேற்கொள்ளப்படும் வேத்துரிமைகள், கட்டணங்கள் அல்லது வேறு அதையொத்த கொடுப்பனவுகள், அல்லது குறிப்பிட்ட சேவைகள் ஆற்றப்பட்டமைக்காக தரகுகளாக அல்லது முகாமைத்துவத்திற்காக அல்லது வங்கித் தொழில், தொழில் முயற்சி விடயம் தவிர, தொழில் முயற்சியின் தலைமை அலுவலகத்திற்கு அல்லது அதன் வேறு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட பணத்தின் மீதான வட்டி என்ற முறையில் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் (உண்மைச் செலவுகளின் மீள் வைப்புத் தவிர) கணக்கிற்கு எடுக்கப்படமாட்டா.

*4.* இதுவரையில் தொழில் முயற்சியின் பல்வேறு பகுதிகளுக்கும் அதன் மொத்த இலாபங்களின் பங்கீடொன்றின் அடிப்படையில் நிரந்தர தாபனமொன்றுக்கு இலாபங்கள் உரித்தாக்கப்பட வேண்டுமென ஒப்பந்த அரசில் அதன் சட்டத்திற்கமையத் தீர்மானிப்பது வழமையாக இருந்து வருவதால் அவ்வாறான பங்கீட்டின் மூலம் வரிவிதிக்கப்பட வேண்டிய இலாபங்கள் தீர்மானிக்கப்படுவதிலிருந்து ஒப்பந்த அரசு வழமைக்கு ஏற்றவாறு இருக்கலாமென்று (2) ஆம் பந்தியில் விலக்கெதுவும் இல்லையெனினும் கடைபிடிக்கப்பட்ட பங்கீட்டு முறை இவ்வுறுப்புரையில் விதிக்கப்பட்ட கோட்பாடுகளுக்கமைவான விளைவையே ஏற்படுத்தும்.

*5.* தொழில் முயற்சிக்கான பொருட்களை அல்லது வணிகப் பொருட்களை ஒரு நிரந்தர நிறுவனம் கொள்வனவு செய்யும் காரணத்திற்காக அந்த நிரந்தர நிறுவனத்திற்கு எந்த இலாபங்களும் சாட்டப்படமாட்டாது.

*6.* முற்போந்த பந்திகளின் நோக்கத்திற்காக, நிரந்தர தாபனத்திற்குச் சேரவேண்டிய இலாபங்கள், முரண்பாட்டிற்குப் போதிய சிறந்த காரணங்கள் இருந்தாலன்றி ஆண்டுதோறும் ஒரே முறையில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

*7.* வருமானங்கள், இவ்வுடன்படிக்கைகள் மற்றைய உறுப்புரைகளில் வேறாக ஆராயப்பட்டுள்ள வருமான விடயங்களை உள்ளடக்குமிடத்து அவ்வுறுப்புரைகளின் ஏற்பாடுகள் இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகளாற் பாதிக்கப்படலாகாது.

**உறுப்புரை 8**

கப்பற்றொழில் மற்றும் விமானப் போக்குவரத்து

*1.* சர்வதேச போக்குவரத்தில் வானூர்திகளை இயக்குவதிலிருந்து தொழில் முயற்சியொன்றினால் பெறப்படும் இலாபங்கள் மீது அந்த ஒப்பந்த நாட்டில் மட்டுமே வரி விதிக்கப்படும்.

*2.* சர்வதேச போக்குவரத்தில் ஒப்பந்த அரசிற்குள் பிற ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்றினால் கப்பல்களை இயக்குவதால் பெறப்படும் இலாபங்கள், அத்தகைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் முதற் குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் விரிவிதிக்கப்படலாம். ஆனால் அத்தகைய இலாபங்கள் மீது இவ்விதம் அந்த அரசில் விதிக்கப்படும் வரியானது அத்தகைய வரியின் 50 சதவீதத்திற்கு சமமான தொயைால் குறைக்கப்படும்.

*3.* கப்பல்களை இயக்குவதற்கான தொழில் முயற்சிகளின் செயலாற்று முகாமைத்துவ நிலையம் கப்பலில் அமைந்திருப்பின் அந்த நிலையம் கப்பலின் உள்துறைமுகம் அமைந்திருக்கும் ஒப்பந்த அரசின் அல்லது அத்தகைய உள்நாட்டு துறைமுகமொன்றில்லாவிடில் கப்பலின் செயற்பாட்டாளர் விதிகின்ற ஒப்பந்த அரசில் ஸ்தாபிக்கப்பட்டதாக கருதப்படவேண்டும்.

4. அனைத்துலக போக்குவரத்தில் கப்பல்கள் அல்லது வானூர்திகளை இயக்கும் போது அல்லது அதனுடன் இணைந்த போக்குவரத்தின் போது பண்டங்கள் அல்லது வர்த்தகப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக பயன்படுத்தப்படும் (கொள்கலன்களை ஏற்றிச் செல்வதற்கான ரேல் மற்றும் வேறு உபணரங்கள் உட்பட) கொள்கலன்களை பயன்படுத்தல், பேணல், அல்லது வாடகைக்கு விடல் மூலம் ஒப்பந்த அரசில் வதியும் போக்குவரத்து தொழில் முயற்சிகளினால் சம்பாதிக்கும் இலாபம் அனைத்துலக போக்குவரத்தின் போது அத்தகைய விமானங்கள் அல்லது கப்பல்களை இயக்கும் போது கிடைக்கும் இலாபங்களாக கருத வேண்டும் என்பதுடன் அந்த கொள்கலன்களை ஏனைய ஒப்பந்த அரசுகளில் மாத்திரம் பயன்படுத்துவதாக இருப்பின் அன்றி முறையே 1 ஆம், 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய வரி அறவிடப்படும்.

5. இவ் உறுப்புரையின் நோக்கங்களுக்காக சர்வதேச போக்குவரத்தின் கப்பல்கள் அல்லது வானூர்திகளை இயக்குவதுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ள முதலீடுகள் மீதான வட்டி அவ்வாறான கப்பல்கள் மற்றும் வானூர்திகளை இயக்குவதன் மூலம் கிடைக்கும் இலாபமாக கருதப்படவேண்டிய சந்தர்ப்பமானது அவை அந்த தொழில் முயற்சியை முன்னெடுப்பதற்கு கருதப்படல் வேண்டும். அத்தியாயவசியமானவை என கருதப்படும் பட்சத்தில் மாத்திரமே என்பதுடன் அந்த வட்டி தொடர்பாக 11 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதானது.

6. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஓர் சேர்மத்தில் இணைந்த வியாபாரத்தில் அல்லது சர்வதேச இயக்க முகவர் நிலையத்தில் பங்குகொள்வதன் மூலம் பெறப்படுகின்ற இலாபங்கள் தொடர்பிலும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

## உறுப்புரை 9

கூட்டிணைந்த தொழில்முயற்சி

1. (அ) ஒப்பந்த அரசொன்றிலுள்ள தொழில் முயற்சி, மற்றைய ஒப்பந்த அரசிலுள்ள ஒரு தொழில்முயற்சியின் முகாமை, கட்டுப்பாடு அல்லது மூலதனம் ஆகியவற்றில் நேராகவோ மறைமுகமாகவோ பங்குபற்றுமிடத்தில், அல்லது ;

(ஆ) ஒப்பந்த அரசொன்றிலுள்ள தொழில் முயற்சியிலும் மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியிலும் அதே ஆட்கள் முகாமை, கட்டுப்பாடு அல்லது மூலதனம் ஆகியவற்றில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்குபற்றுமிடத்து, மற்றும்

இவ்விடயங்கள் எவற்றிலும் சுதந்திர தொழில்முயற்சிகளுக்கு இடையில் வணிக மற்றும் நிதிசார் தொடர்புகள் பற்றிய நிபந்தனைகளை பார்க்க வித்தியாசமான நிபந்தனைகள் அத்தொழில் முயற்சிகள் இரண்டிற்கிடையில் ஆக்கப்பட்டு விதிக்கப்பட்டுள்ளவிடத்து அந்நிபந்தனைகள் இராவிடின் அத்தொழில் முயற்சிகளில் ஒன்றுக்கு சேரக்கூடிய எனினும் அந்நிபந்தனை காரணமாக அவ்வாறு சேராத எத்தகைய இலாபங்களாக இருப்பினும் அத்தொழில் முயற்சியின் இலாபங்களில் உள்ளடக்கி அதன்படி இலாபம் மீது வரி விதிக்கப்படல் வேண்டும்.

2. ஒப்பந்த அரசொன்று அந்த அரசின் தொழில் முயற்சியொன்றின் இலாபங்களில் மற்றைய ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்றுக்கும் அந்த மற்றைய அரசில் வரி விதிக்கப்பட்ட இலாபங்களையும், இவ்விதம் உட்சேர்க்கப்பட்ட இலாபங்களில் இரு தொழில் முயற்சிகளுக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் சுதந்திர தொழில் முயற்சிகளிடையே மேற்கொள்ளப்பட்டமை போன்றிருப்பின் முதற் குறிப்பிட்ட அரசில் தொழில் முயற்சிக்கு சேர்ந்திருக்கக்கூடியதான இலாபங்களாகவுமிருப்பின் அத்தகைய இலாபங்களை உட்சேர்த்து அதற்கிணங்க வரி விதிப்பின் அந்த மற்றைய அரசு அந்த இலாபங்கள் மீது விதிக்கப்படும் வரித்தொகையில் ஏற்றதான மாற்றத்தை மேற்கொள்ளலாம். அத்தகைய மாற்றத்தைத் தீர்மானிக்கையில் உடன்படிக்கையில் ஏனைய ஏற்பாடுகளுக்கு உரிய மதிப்பளிக்கப்படுமென்பதுடன் தேவையேற்படுமிடத்து ஒப்பந்த நாடுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகளும் ஒருவரையொருவர் கலந்தாலோசிப்பர்.

## உறுப்புரை 10

பங்கிலாபங்கள்

1. ஒப்பந்த அரசொன்றில் வதியும் கம்பனியொன்றினால் மற்றைய ஒப்பந்த அரசில் வதியுமொருவருக்குச் செலுத்தப்படும் பங்கிலாபங்கள் மீது அந்த மற்றைய அரசில் வரிவிதிக்கப்படலாம்.

2. எவ்வாறெனினும், அத்தகைய பங்கிலாபத்தைச் செலுத்துகின்ற கம்பனி வதியும் ஒப்பந்த அரசிலும் அப்பங்கிலாபங்கள் மீது அவ்வரசின் சட்டங்களுக்கமைய வரிவிதிக்கப்படலாம். ஆனால் பங்கிலாபங்களைப் பெறுபவர் மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவரெனின் அவ்விதம் விதிக்கப்படும் வரியானது பங்கிலாபத்தின் மொத்தத் தொகையின் 7.5 வீதத்தை விஞ்சுதலாகாது. பங்கிலாபங்களாக செலுத்தப்படும் இலாபங்கள் தொடர்பில் கம்பனியின் வரிவிதிப்பினை இப்பந்தி ஏற்பாடுகள் பாதிக்கப்படமாட்டது.

3. இவ்வுறுப்புரையில் பயன்படுத்தப்பட்டுள்ள "பங்கிலாபங்கள்" எனும் சொல் கடன்கோரிக்கைகள் அல்லாத பங்குகள் அல்லது ஏனைய உரிமைகளிலிருந்தான வருமானம், இலாபங்களில் பங்குகொள்ளல், பகிர்வுகள் மேற்கொள்ளும் கம்பனி வதிவுள்ள நாட்டின் சட்டங்களினால் பங்குகளிலிருந்து பெறப்படும் வருமானமெனக் கருதப்பட்டு அதே வரிவிதிப்பிற்கு உட்படுத்தப்படும் கூட்டிணைந்த உரிமைகளிலிருந்து பெறப்படும் வருமானமும் எனப்பொருள்படும்.

4. ஒப்பந்த அரசொன்றில் வதிபவரும், பங்கிலாபங்களின் நலன்பெறும் சொந்தக்காரர் பங்கிலாபங்களைச் செலுத்தும் கம்பனி வதிகின்ற மற்றைய ஒப்பந்த அரசில் அங்கமைந்துள்ள நிரந்தரத் தாபனமொன்றினூடாகத் தொழிலை நடாத்துவதுடன் அங்கமைந்துள்ள நிலையான தளத்திலிருந்து சுதந்திரமான தனிப்பட்ட சேவைகளைப் புரியின் பங்கிலாபங்கள் செலுத்தப்படுகின்ற தொடர்பிலான நிலையம் அத்தகைய நிந்தரத் தாபனத்துடன்அல்லது நிலையான தளத்துடன் பயனுள்ள வகையில் இணைக்கப்பட்டிருப்பின் 1 ஆம், 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகாத அத்தகைய சந்தர்ப்பங்களில் 7 ஆம், 14 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் விடயத்துக்கு ஏற்ப ஏற்புடைத்தாகும்.

5. ஒப்பந்த அரசொன்றில் வதிவுள்ள கம்பனியொன்று வருமானத்தை அல்லது இலாபங்களை மற்றைய ஒப்பந்த அரசிலிருந்து பெறுமிடத்து அத்தகைய பங்கிலாபங்கள் அந்த மற்றைய அரசின் வதிவுள்ளவரொருவருக்குச் செலுத்தப்படுமிடத்து தவிர்ந்த அல்லது எப்பங்கு தொடர்பில் பங்கிலாபங்கள் செலுத்தப்படுகின்றதோ அவை நிரந்தர தாபனமொன்றினுடன் அல்லது நிலையான தளமொன்றுடன் பயனுள்ள வகையில் தொடர்புபட்டிருப்பின் தவிர அல்லது செலுத்தப்படும் கம்பனியினால் செலுத்தப்படும் பங்கிலாபங்கள் மீது வரியெதுவும் விதிக்கப்படலாகாது. பங்கிலாபங்கள் அல்லது பகிரப்படாத இலாபங்கள் முழுவதாக அல்லது பகுதியாக அத்தகைய மற்றைய ஒப்பந்த அரசில் வரும் இலாபங்களை அல்லது வருமானத்தை உள்ளடக்கியிருப்பினும் கம்பனியின் பகிரப்படாத இலாபங்களை அக்கம்பனியின் பகிரப்படாத இலாபங்கள் மீதான வரிக்கு உட்படுத்த மாட்டாது.

**உறுப்புரை 11**

வட்டி வருமானம்

1. ஒப்பந்த அரசொன்றில் எழுவதும் மற்றைய அரசில் வதியுமொருவருக்குச் செலுத்தப்படுவதுமான வட்டி அந்த மற்றைய ஒப்பந்த அரசில் வரிவிதிக்கப்படலாம்.

2. எனினும், அத்தகைய வட்டி அது எழுகின்ற ஒப்பந்த அரசினால் அவ்வரசின் சட்டங்களுக்கு இணக்கமாக வரிவிதிக்கவும் படலாம். ஆனால் வட்டி பெறுபவர் வட்டியின் நலன்பெறும் சொந்தக்கார் மற்றைய ஒப்பந்த அரசில் வதியுபவராக இருப்பின் அவ்விதம் விதிக்கப்படும் வட்டி, வட்டித் மொத்த தொகையின் 10 சதவீதத்தை விஞ்சமாட்டாது.

3. 2 ஆவது பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் ஒப்பந்த அரசொன்றில் எழும் வட்டி.

(அ) மற்றைய ஒப்பந்த அரசில் அரசு, அரசில் உபபிரிவு அல்லது உள்ளூராட்சி அதிகார சபையினால் அல்லது ;

(ஆ) (i) இந்தியா தொடர்பாக இந்திய வங்கிக் குழுவும் இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வங்கி, தேசிய வீடமைப்பு வங்கியினால் மற்றும்

(ii) இலங்கை தொடர்பாக இலங்கை மத்திய வங்கியினால் அல்லது ;

(இ) கடித கொடுக்கல் வாங்கல்கள் மூலம் ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் காலத்திற்குக் காலம் உடன்படக்கூடியவாறான அதன் மூலதனம் பூரணமாக அந்த அரசினால் சொந்தமாக்கப்பட்ட ஏதேனும் வேறு நிறுவனங்களால் உழைக்கும் பட்சத்தில் மற்றும் இதில் வரைவிலக்கணம் கூறப்பட்டவர் நலன்பெறும் உரிமையாளராக இருப்பின் அந்த வட்டி அந்த அரசில் வரி விலக்களிப்புக்கு உள்ளாக வேண்டும்.

4. இந்த உறுப்புரையில் பிரயோகிக்கப்பட்டவாறு "வட்டி" எனும் சொல் எல்லா வகையான கடன் கோரிக்கைகளும் அவை அடைமானத்தாற் கிடைத்தாலும் இல்லாவிட்டாலும் கடன்காரரின் இலாபத்திற் பங்குகொள்ளும் உரிமையுடையனவாயினும் இல்லாவிட்டாலும் குறிப்பாக அரசாங்கப் பிணைகளிலிருந்தும், அத்தகைய பிணைகளுடன் இணைந்துள்ள கட்டுப் பணங்களும் வெகுமதிகளும் உட்பட பிணையங்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களிலிருந்து எழும் வருமானம் எனப் பொருள்படும் தாமதக் கொடுப்பனவுகளுக்கான தண்ட விதிப்பனவுகள் இந்த உறுப்புரிமையின் நோக்கங்களுக்காக வட்டி எனக் கருதப்படமாட்டாது.

5. வட்டியின் நலன்பெறும் சொந்தக்காரர் ஒப்பந்த நாடொன்றில் வதிபவராயிருக்கையில் வட்டி எவ்வொப்பந்த அரசில் எழுகின்றதோ அவ்வொப்பந்த அரசில் அங்கமைந்துள்ள நிரந்தரத்தாபனமொன்றினூடாகத் தொழில் முயற்சியொன்றைக் கொண்டு நடாத்துவதாகவும் அல்லது அந்த மற்றைய அரசில் அங்கமைந்துள்ள நிரந்தரத் தாபனமொன்றினூடாக சுதந்திர தனிப்பட்ட சேவைகளை ஆற்றுவதாகவும் எக்கடன் கோரிக்கை தொடர்பில் வட்டி செலுத்தப்படுத்தப்படுகின்றதோ அக்கடன் கோரிக்கை பயனுள்ள வகையில் அத்தகைய நிரந்தரத் தாபனத்துடன் அல்லது நிலையான தளத்துடன் தொடர்புபடுத்தப்படின் 1 ஆம், 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகா ஆனால் விடயத்திற்கேற்ப 7 ஆம், 14 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும்.

6. வட்டி செலுத்துபவர் அந்த அரசின் வதியுநராக உள்ளவிடத்து, வட்டி ஒப்பந்த அரசொன்றில் எழுவதாகக் கருதப்படும். எனினும் வட்டியைச் செலுத்துபவர் அவர் ஒப்பந்த அரசொன்றில் வதியினும் இல்லாவிடினும் வட்டி எக்கடன்பாட்டின் மீது செலுத்தப்படுகின்றதோ அக்கடன்பாடு எந்நிரந்தரத் தாபனத்தின் தொடர்பில் ஏற்பட்டதோ அந்நிரந்தரத் தாபனத்தை அல்லது நிலையான தளத்தை ஒப்பந்த அரசொன்றில் வைத்திருக்குமிடத்தும் அத்தகைய வட்டி அத்தகைய நிரந்தரத் தாபனத்தினால் அல்லது நிலையான தளத்தினால் கொடுக்கப்படுமிடத்தும் நிரந்தர தாபனம் அல்லது நிலையான தளம் அமைந்துள்ள ஒப்பந்த அரசில் எழுவதாகக் கருதப்படும்.

7. வட்டி செலுத்துபவராலும் நலன்பெறும் சொந்தக்காரருக்குமிடையில் அல்லது அவ்விருவருக்கும் வேறொருவருக்குமிடையில் உள்ள விசேட தொடர்பின் காரணத்தால் வட்டித்தொகை அது எக்கடன் கோரிக்கைகளுக்காகச் செலுத்தப்படுகின்றதோ அதனை கவனத்தில் கொண்டு அத்தகைய தொடர்பு இல்லாதிருந்த பொழுது வட்டி செலுத்துபவராலும், நலன்பெறும் சொந்தக்காரராலும் உடன்பட்டிருக்க வேண்டிய தொகையை விஞ்சுமிடத்து இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் கடைசியாகக் குறிப்பிட்ட தொகைக்கு மாத்திரமே ஏற்புடைத்தாகும். அத்தகைய விடயத்தில் இவ்வுடன்படிக்கையின் ஏனைய ஏற்பாடுகளை உரிய கவனத்தில் கொண்டு கொடுப்பனவுகளின் விஞ்சியுள்ள பகுதி ஒப்பந்த அரசு ஒவ்வொன்றினதும் சட்டங்களின்படி வரிவிதிப்புக்குரியதாகும்.

**உறுப்புரை 12**

வேத்துரிமைகள் மற்றும் தொழில்நுட்ப சேவைகளுக்கான கட்டணங்கள்

1. ஒப்பந்த அரசொன்றில் எழுவனவும் மற்றைய ஒப்பந்த அரசில் வதியுமொருவருக்குச் செலுத்தப்படுவனவுமான வேத்துரிமைகள் அல்லது தொழில்நுட்ப சேவைகள் கட்டணங்கள் அந்த மற்றைய ஒப்பந்த அரசில் வரிவிதிக்கப்படலாம்.

2. எனினும் அத்தகைய வேத்துரிமைகள் அல்லது தொழில்நுட்ப சேவைகளுக்கான கட்டணங்கள் அவை எழும் ஒப்பந்த அரசில் அவ்வரசின் சட்டங்களுக்கமைய வரிவிதிக்கப்படவும் படலாம். ஆனால் வேத்துரிமையின் அல்லது தொழில்நுடப் சேவைகள் கட்டங்களின் நலன்பெறும் உரிமையாளர் மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவராயின் அவ்வாறு விதிக்கப்படும் வரி, வேத்துரிமைகள் அல்லது தொழில்நுட்ப சேவைகள் கட்டணங்களின் மொத்த தொகையின் 10 சதவீதத்தை விஞ்சுதலாகாது.

3. (அ) இவ்வுறுப்புரையில் பிரயோகிக்கப்பட்டுள்ளபடி "வேத்துரிமைகள்" எனும் சொல் திரைப்படக்கருவி அல்லது திரைப்படச்சுருள் அல்லது தொலைக்காட்சி அல்லது வானொலி ஒலி/ஒலிப்பதிவு நாடாக்கள் உட்பட இலக்கிய, கலை அல்லது விஞ்ஞானப்ப படைப்புகளின் ஏதேனும் பதிப்புரிமை, ஆக்வுரிமை, வியாபார அடையாளம், வடிவம் அல்லது மாதிரி கணினி மென்பொருள் நிகழ்ச்சித்திட்டம் வரைபடல் இரகசிய வாய்பாடு அல்லது முறைமை ஆகியவற்றை உபயோகிப்பதற்கு அல்லது உபயோகிக்கும் உரிமைக்கு அல்லது கைத்தொழில், வர்த்தக அல்லது விஞ்ஞான உபகரணம் அல்லது கைத்தொழில் வர்த்தக அல்லது விஞ்ஞான அனுபவம் சார்ந்த தகவல்களுக்காகக் கைமாறாகப் பெறப்படும் எவ்வகையிலுமான கொடுப்பனவுகள் எனப் பொருள்படும்.

(ஆ) இப்பிரிவில் கூறப்பட்டுள்ள "தொழில்நுட்ப சேவைகளுக்கான கட்டணம்" என்ற சொல் தொழில்நுட்ப அல்லது வேறு ஆட்களின் சேவைகள் வழங்கல் உட்பட முகாமைத்துவ அல்லது தொழில்நுட்ப அல்லது மதியுரை சேவைகளுக்கான கியரமென்ற வகையில் எந்தவோர் வகையைச் சேர்ந்த கொடுப்பனவு இவ்வொப்பந்தத்தின் 14 மற்றும் 15 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை தவிர்ந்த எனப் பொருள்படும்.

4. ஒப்பந்த அரசொன்றில் வதியும், வேத்துரிமைகளின் தொழில்நுட்ப சேவைகளின் கட்டணங்களில் நலன்பெறும் சொந்தக்காரர் வேத்துரிமை தொழில்நுட்பக் கட்டணங்கள் எழுகின்ற ஒப்பந்த அரசில் அங்கமைத்துள்ள நிரந்தரத் தாபனமொன்றினூடாகத் தொழிலொன்றை நடாத்துவரெனின் அல்லது அந்த மற்றைய அரசில் அங்கமைத்துள்ள நிலையான தளமொன்றிலிருந்து சுதந்திரமான தனிப்பட்ட சேவைகளை ஆற்றுபவராகவும் எவ்வுரிமை அல்லது ஆசனத்தின் தொடர்பில் வேத்துரிமைகள் தொழில்நுட்ப சேவைகள் கட்டணங்களில் செலுத்தப்படுகின்றனவோ அவ்வுரிமை அல்லது ஆதனம் அத்தகைய நிரந்தரத் தாபனம் அல்லது நிலையான தளத்துடன் பயனுள்ள வகையில் தொடர்புடையதாகவும் இருப்பின் இவ்வுறுப்புரையின் 1 ஆம், 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகா, அத்தகைய சந்தர்ப்பத்தில், விடயத்திற்கேற்ப 7 ஆம் அல்லது 14 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும்.

5. (அ) வேத்துரிமை செலுத்துபவர் அவ்வரசாக அல்லது அரசியல் உப பிரிவாக அல்லது உள்ளூர் அதிகார சபையொன்றாக அல்லது அவ்வரசில் வதிபவரொருவராக இருப்பின் வேத்துரிமைகள் தொழில்நுட்ப சேவைக் கட்டணங்கள் மற்றும் ஒப்பந்த அரசொன்றில் எழுதுவதாகக் கருதப்படும். எனினும் வேத்துரிமைகளை தொழில்நுட்ப சேவைக் கட்டணங்கள் செலுத்தும் ஆளொருவர் அவர் ஒப்பந்த அரசொன்றில் வதிபராயினும், வதியாவிடினும் அவ்வேத்துரிமைகளைச் அல்லது செலுத்தவேண்டிய கட்டுப்பாடு எந்த நிரந்தரத் தாபனத்தின் அல்லது நிலையான தளத்தின் தொடர்பில் ஏற்பட்டு அத்தகைய வேத்துரிமைகள் தொழில்நுட்ப சேவைக் கட்டணங்கள் அந்நிரந்தரத் தாபனத்தால் அல்லது நிலையான தளத்தால் பொறுக்கப்பட்டனவோ, அந்நிரந்தரத் தாபனத்தை அல்லது நிலையான தளத்தை ஒப்பந்த அரசொன்றில் வைத்திருப்பவரெனின் அத்தகைய வேத்துரிமைகள் அல்லது தொழில்நுட்ப சேவைக் கட்டணங்கள் நிரந்தரத் தாபனம் அல்லது நிலையான தளம் அமைந்துள்ள அரசில் எழுவதாகக் கருதப்படும் ;

(ஆ) உபபந்தி (அ) வின் கீழ் வேத்துரிமை அல்லது தொழில் நுட்ப சேவைக்களுக்கான கட்டணங்கள் ஒப்பந்த நாடொன்றில் எழாதபோது மற்றும் உரிமை அல்லது சொத்துக்கள் பாவனை அல்லது பாவனைக்காக உரிமைகள் தொடர்பான வேத்துரிமை அல்லது நிறைவேற்றப்பட்ட சேவைகளுடன் தொடர்பான தொழில்நுட்ப சேவைகளுக்கான கட்டணங்கள் ஒரு ஒப்பந்த அரசில், வேத்துரிமை அல்லது தொழில்நுட்ப சேவைகளுக்கான கட்டணங்கள் அந்த ஒப்பந்த அரசில் எழுவகையாக கருதப்படல் வேண்டும்.

*6.* வேத்துரிமை செலுத்துபவருக்கும் பெறுபவருக்குமிடையில் அல்லது இருவருக்கும் வேறொருவருக்குமிடையில் உள்ள விசேட தொடர்பின் காரணத்தால் செலுத்தப்படும் வேத்துரிமைகளின் தொகை அல்லது தொழில்நுட்ப சேவைக் கட்டணங்கள் அத்தகைய தொடர்பு இல்லாதிருந்தபோது செலுத்துபவராலும் பெறுபவராலும் உடன்பட்டிருக்க வேண்டிய தொகையை விஞ்சுமிடத்து, அவை எவ் உபயோகம், உரிமை ஆதனம் அல்லது தகவலுக்காகச் செலுத்தப்படுகின்றனவோ அவற்றுக்கு மதிப்பளித்து இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் கடைசியிற் குறிப்பிட்ட தொகைக்கு மட்டுமே ஏற்புடைத்தாகும். அத்தகைய வியடத்தில் இவ்வுடன்படிக்கையின் ஏனைய ஏற்பாடுகளை உரிய கவனத்திற் கொண்டு கொடுப்பனவுகளின் விஞ்சியுள்ள பகுதி ஒப்பந்த அரசு ஒவ்வொன்றினதும் சட்டங்களின்படி வரி விதிக்கப்படும்.

***உறுப்புரை 13***

*மூலதன இலாபங்கள்*

*1.* ஒப்பந்த அரசொன்றில் வதிபவரால் 6 ஆம் உறுப்புரையில் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதும் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ளதுமான அசைவற்ற ஆதனத்தின் பராதீனத்தின் மூலம் பெறப்படும் ஆதாயங்கள் அந்த மற்றைய அரசில் விதிக்கப்படலாம்.

*2.* ஒப்பந்த அரசொன்றில் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் வைத்திருக்கும் நிரந்தரத் தாபனத்தின் வியாபார ஆதனத்தின் பாகமாயமைந்துள்ள அசைவுள்ள ஆனத்தின் அல்லது ஒப்பந்த அரசொன்றில் வதிவுள்ள ஒருவருக்கு சுயாதீன ஆள்சார் சேவைகளை நிறைவேற்றுவதற்காக காணப்படும் நிரந்தர அடிப்படையுடன் தொடர்பான அசையும் ஆதனத்தின் பராதீனத்தால் பெறப்படும் இலாபங்கள் அத்தகைய நிரந்தர நிறுவனத்துள் (தனியாக அல்லது முழுத்தொழில் முயற்சியுடனும்) அல்லது நிலையான தளத்தின் பராதீனத்திலிருந்து பெறப்படும் இலாபங்களுட்பட அத்தகைய அந்த மற்றைய அரசில் அத்தகைய வரி விதிக்கப்படலாம்.

*3.* சர்வதேசப் போக்குவரத்தில் இயக்கப்படும் கப்பல்கள் அல்லது வானூர்தியின் அல்லது அத்தகைய கப்பல்கள் அல்லது வானூர்தியுடன் தொடர்புடைய அசைவுற்ற ஆதனத்தின் பராதீனத்தாற் பெறப்படும் ஆதாயங்கள் அந்த சொத்துக்கான பராதீனப்படுத்துபவர் வதியும் ஒப்பந்த அரசில் மட்டுமே வரிவிதிக்கப்படலாம்.

*4.* ஒப்பந்த அரசில் நேரடியாக அல்லது மறைமுகமாக அசைவற்ற ஆதனத்தைக் கொண்டுள்ள சொத்துக்களடங்கிய கம்பனியொன்றின் பங்குகளின் மூலதன இருப்பின் பராதீனத்திலிருந்து ஒப்பந்த அரசில் வதிபவரொருவரால் பெறப்படும் இலாபங்கள் அந்த ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.

*5.* 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறானவை தவிர ஒப்பந்த அரசில் வதியும் கம்பனியொன்றில் பங்குகளின் பராதீனத்திலிருந்து பெறப்படும் இலாபங்கள் அந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.

*6.* முற்போந்த 1, 2, 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவை தவிர்ந்த ஏனைய ஆதனம் எதனதும் பராதீனத்தாற் பெறப்படும் ஆதாயங்கள் பராதீனப்படுத்துபவர் வதியும் ஒப்பந்த அரசில் மட்டுமே விதிக்கப்படலாம்.

***உறுப்புரை 14***

*சுயாதீன தனிப்பட்ட சேவைகள்*

*1.* உயர்தொழிற் சேவைகள் அல்லது சுயாதீன இயல்புடைய தொழிற்பாடுகள் மூலம் ஒப்பந்த அரசொன்றில் வதியுமொருவரால் பெறப்படும் வருமானம் பின்வரும் ஏதேனும் சந்தர்ப்பங்களில் தவிர அந்த ஒப்பந்த அரசில் மட்டுமே விதிப்புக்குள்ளாகும் என்பதுடன் அத்தகைய வருமானம் வரி விதிப்புக்குள்ளாகும் பின்வருவனவற்றிலிருந்து எழும் அத்தகைய வருமானம் அந்த மற்றைய ஒப்பந்த அரசில் மட்மே வரி விதிப்பிற்குள்ளாகும்.

(அ) அவரது பணிகளை புரியும் நோக்கத்திற்காக நிலையான தளமொன்று மற்றைய ஒப்பந்த அரசில் இருந்தால், அந்த நிலையான தளத்திற்கு சாட்டத்தக்கதான அத்தகைய வருமானம் மட்டுமே அந்த மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம் ;

(ஆ) தொடர்புடைய அரசிறை வருடத்தின் ஆரம்பத்தில் அல்லது இறுதியில் ஏதேனும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் சராசரியாக 183 நாட்களுக்கு அல்லது அதை விஞ்சிய குறித்ததொரு காலத்திற்கு அல்லது காலப்பகுதிகளுக்கு மற்றைய ஒப்பந்த அரசில் அவர் தங்கியிருப்பாராயின் ; அச்சமயத்தில் மற்றைய அரசில் நிறைவேற்றப்பட்ட அவரது செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானத்தில் ஒரு பகுதி மற்றைய அரசில் வரிவிதிக்கப்படலாம்.

*2.* "உயர்தொழில் சேவைகள்" என்ற சொல் விசேடமாக சுயாதீன விஞ்ஞான, இலக்கிய, கலை, கல்வி, அல்லது கற்பித்தல் பணிகளைப் போன்று வைத்தியர்கள், சட்டத்தரணிகள், எந்திரவியலாளர்கள், கட்டிடக்கலை நிபுணர்கள், சத்திரசிகிச்சை, நிபுணர்கள் பல் வைத்தியர்கள், கணக்காளர்கள் என்போரது சுதந்திரமான தொழிற்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.

**உறுப்புரை 15**

சார்ந்துள்ள தனிப்பட்ட சேவைகள்

1. 16, 18, 19, 20, 21 ஆம் உறுப்புரைகளிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய தொழிலொன்று தொடர்பில் ஒப்பந்த அரசில் வதியுமொருவராற் பெறப்படும் சம்பளங்கள், ஊதியம் மற்றும் அதையொத்த வேதனங்களும், தொழிலானது அம்மற்றைய ஒப்பந்த அரசில் ஆற்றப்பட்டாலன்றி அவ்வரசில் மட்டுமே வரி விதிப்புக்குள்ளாகும் தொழிலானது அவ்வகையில் ஆற்றப்படுமாயின் அதிலிருந்து பெறப்படும் வேதனம் அம்மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.

2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் பின்வரும் சந்தர்ப்பங்களில் மற்றைய ஒப்பந்த அரசில் ஆற்றப்படும் தொழிலொன்றின் தொடர்பில் ஒப்பந்த அரசொன்றில் வதியுமொருவரால் பெறப்படும் வேதனம், முதலாவதாகக் குறிப்பிட்ட ஒப்பந்த அரசியல் மட்டுமே வரி விதிக்கப்படலாம்.

(அ) வேதனத்தைப் பெறுபவர் குறிப்பிட்ட நிதி ஆண்டு ஆரம்பமாகும் அல்லது முடிவடையும் ஏதேனும் 12 மாதங்களில் கூட்டுமொத்தமாக 183 நாட்களை விஞ்சாத காலப்பகுதிக்கு அல்லது காலப்பகுதிகளுக்கு மற்றைய ஒப்பந்த அரசில் இருப்பாராயின் அத்துடன் ;

(ஆ) வேதனங்கள், மற்றைய ஒப்பந்த அரசில் வதியாத தொழில்தருநரொருவரால் அல்லது அவரின் சார்பிற் செலுத்தப்பட்டிருப்பின் அத்துடன்

(இ) தொழில்தருநர் மற்றைய அரசில் வைத்திருக்கும் நிரந்தரத் தாபனமொன்றினால் அவ்வேதனம் கொண்டிக்கப்படாவிடின் ;

3. இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகள் எவ்வாறாயிருப்பினும் , சர்வதேசப் போக்குவரத்தில் கப்பலொன்றில் அல்லது வானூர்தி ஒன்றில் ஆற்றப்படும் பணியின் தொடர்பில் பெறப்படும் வேதனம், ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சியினால் அவ் அரசில் வரி விதிக்கப்படலாம்.

**உறுப்புரை 16**

பணிப்பாளர் கட்டணங்கள்

ஒப்பந்த அரசொன்றின் வதிவாளர் ஒருவரினால், மற்றைய ஒப்பந்த அரசில் வதிவுள்ள கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கத்தவர் என்ற தகுதியில் பெறப்படும் பணிப்பாளர் கட்டணமும், அதையொத்த கொடுப்பனவுகளும் அந்த மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.

**உறுப்புரை 17**

கலைஞர்களும் விளையாட்டு வீரர்களும்

1. 14 ஆம், 15 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் ஒப்பந்த அரசில் வதியுமொருவரால் படமாளிகை இயக்கத் திரைப்படம், வானொலி அல்லது தொலைக்காட்சி என்பவற்றின் கலைஞராக அல்லது பாடகராக அல்லது விளையாட்டு வீரராக அவரது தனிப்பட்ட தொழிற்பாடுகளிலிருந்து பெறப்படும் வருமானம், அத்தொழிற்பாடுகள் இடம்பெறும் ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.

2. கலைஞர் அல்லது விளையாட்டு வீரர் ஒருவரின் தனிப்பட்ட முயற்சிகளின் தொடர்பிலான வருமானம் அக்கலைஞருக்கு அல்லது விளையாட்டு வீரருக்குச் சேராமல், வேறொருவருக்குச் சேருமிடத்து 7, 14, 15 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அவ்வருமானம் அக்களியாட்டக்காரர் அல்லது விளையாட்டு வீரரின் முயற்சிகள் இடம்பெறும் ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.

3. கலைஞர்கள் அல்லது விளையாட்டு வீரர்களினால் ஒப்பந்த அரசொன்றில் நிறைவேற்றப்படும் நடவடிக்கைகளுக்காக ஓர் ஒப்பந்த அரசில் அல்லது இரண்டில் அல்லது அவற்றின் அரசியல் உப பிரிவுகளில் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களில் பொது நிதியங்கள் மூலமாக குறிப்பிடத்தக்களவு உதவியிருப்பின் அவ்வாறான நடவடிக்கைகள் மூலம் கிடைக்கும் வருமானத்துக்காக (1) ஆம் மற்றும் (2) ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் கலைஞர் அல்லது விளையாட்டு வீரர் வதியும் ஒப்பந்த அரசில் மாத்திரம் வருமானம் வரி விதிப்புக்குள்ளாகும்.

**உறுப்புரை 18**

ஓய்வூதியங்கள் மற்றும் ஆண்டுத்தொகைகள்

*1.* 19 உறுப்புரையின் 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய ஒப்பந்த அரசில் நிறைவேற்றிய கடந்த கால சேவையை கருத்திற்கொண்டு செலுத்தப்படும் ஓய்வூதியம் மற்றும் அதையொத்த உழைப்பு அந்த ஒப்பந்த அரசில் மட்டுமே வரிவிதிக்கப்படலாம்.

*2.* ''ஆண்டுத்தொகை'' என்ற சொல் பணம் அல்லது பணப்பெறுமதியில் போதியளவு அல்லது பூரணமான கிரயமாக செலுத்தல்களை செய்யும் கடமைப்பாட்டின் கீழ் தனது வாழ்நாளில் அல்லது உறுதியான அல்லது குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வெளியிடப்பட்ட நேரங்களில் காலத்துக்குக் காலம் செலுத்த வேண்டிய வெளிப்படுத்தப்பட்ட பண அளவு ஆகும்.

**உறுப்புரை 19**

அரசாங்க சேவை

1. (அ) ஒப்பந்த அரசொன்று அல்லது அரசியல் உப பிரிவொன்று அல்லது உள்ளூர் அதிகாரசபைக்கு அல்லது ஆற்றப்பட்ட சேவைகளுக்காக எவரேனும் ஆளுக்குச் செலுத்தப்படும் ஓய்வூதியம் அல்லது சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் அதையொத்ததாக உழைப்பூதியங்கள் அவ் அரசில் மட்டும் வரி விதிக்கப்படலாம் ;

(ஆ) எனினும் அச்சேவைகள் அவ்வரசில் ஆற்றப்படுவதுடன் பெறுநர் அவ்வரசில் வதிபவருமானவராக இருந்து பின்வரும் நிபந்தனைகளாவன –

(i) அவ்வரசின் நாட்டினத்தவராக அல்லது

(ii) சேவைகளை ஆற்றும் நோக்கத்திற்காக மட்டும் அவ்வரசில் வதிபவராக மாறியிராதவராகவும் இருப்பின் அத்தகைய சம்பளம் வேதனம் அரையொத்த ஊதியம் என்பன மற்றைய ஒப்பந்த அரசில் மட்டுமே வரி விதிக்கப்படலாம்.

2. (அ) ஒப்பந்த அரசொன்றினால் அல்லது அதன் அரசியல் துறைப் பிரிவினால் உள்ளூர் அதிகார சபையினால் உருவாக்கப்பட்ட திகதிகளிலிருந்து தனியாளொருவருக்கு அந்த அரசிற்கு அல்லது அதன் அரசியல் துறைப் பிரிவுக்கு அதிகார சபைக்கு வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில் செலுத்தப்படும் ஏதேனும் ஓய்வூதியம் அந்த அரசில் மட்டுமே வரி விதிக்கப்படலாம்.

(ஆ) எவ்வாறாயினும், அவ்ஆள் மற்றைய அரசின் வதிவாளராகவும் நாட்டினத்தவராகவும் இருப்பாராயின், அவ்வாளின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் மாத்திரம் வரிவிதிக்கப்படல் வேண்டும்.

*3.* 15, 16, 17, 18 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் ஒப்பந்த அரசுகளில் ஒன்றினால் அல்லது அதன் அரசியல் துறைப் பிரிவினால் அல்லது அங்குள்ள உள்ளூர் அதிகாரசபையினால் கொண்டு நடாத்தப்படும் ஏதாயினும் வியாபாரத்தின் தொடர்பில் ஆற்றிய சேவைகளுக்காக வழங்கப்படும் வேதனங்களுக்கும், ஓய்வூதியங்களுக்கும் ஏற்புடைத்தாகும்.

*4.* இவ் உறுப்புரையின் நோக்கத்துக்காக ''அரசாங்கம்'' எனும் சொல் ஒப்பந்த அரசில் ஏதாவதொரு அரசின் அரசாங்கமொன்று அல்லது உள்ளூர் அதிகாரசபையொன்று உள்ளடக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**உறுப்புரை 20**

பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்

*1.* மற்றைய ஒப்பந்த அரசுக்கு வருகை தருவதற்கு முன்னராக ஒப்பந்த அரசில் வதியும் அல்லது வதிந்த பேராசிரியர், ஆசிரியர், ஆராய்ச்சியாளர் ஒருவர் கற்பித்தல் அல்லது விரிவுரைகளை நிறுவனத்தில் அல்லது அந்த இரு பணிகளுக்காக மற்றைய அரசில் பல்கலைக்கழகமொன்றில் கல்லூரியொன்றில் அல்லது வேறு அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அவ்வாறான கற்பித்தல் அல்லது ஆய்வுக்காக கிடைக்கும் ஊதியம் அந்த மற்றைய அரசுக்கு அவர் வந்த நாள் தொடக்கம் இரண்டு வருடங்களை விஞ்சாத காலப்பகுதிக்காக அந்த மற்றைய அரசில் வரியிலிருந்து விலக்களிக்கப்படல் வேண்டும்.

*2.* இந்த உறுப்புரை நோக்கங்களுக்காக எவரேனும் நபரொருவர் ஒப்பந்த அரசின் வதியுனராக கருதப்படுவதாவது அவர் மற்றைய ஒப்பந்த அரசுக்கு வந்த நிதி ஆண்டின் அல்லது அதற்கு முன்னரான நிதி ஆண்டின் குறிப்பிடப்பட்ட மற்றைய ஒப்பந்த அரசின் வதியுனராக இருப்பின் மாத்திரமாகும்.

*3.* 1 ஆவது பந்தியில் உள்ள நோக்கங்களுக்காக, ''அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்'' என்ற சொல் குறிப்பிட்ட ஒப்பந்த அரசின் அரசாங்கத்தினால் இது தொடர்பாக அனுமதிக்கப்பட்ட நிறுவனம் என்பதாகும்.

***உறுப்புரை 21***

*மாணவர்கள்*

*1. ஒப்பந்த அரசொன்றிற்குச் செல்வதற்கு உடன் முன்னர் அடுத்த ஒப்பந்த அரசில் வதிபவராகவும் அல்லது வதிந்தவராகவும் முதற் குறிப்பிட்ட அரசில் தனது கல்வி அல்லது பயிற்சி நோக்கத்திற்காக மட்டும் இருப்பவரான மாணவரொருவர், அவரது பராமரிப்பு,கல்வி, பயிற்சி என்பவற்றிக்காக அரசின் வெளியே உள்ள மூலங்களிலிருந்து கிடைக்கும் கொடைகள், புலமை பரிசில்கள் மற்றும் ஏதேனும் செலுத்தல்களுக்கு மேலதிகமாக அந்த மற்றைய அரசில் அவர் ஈடுபட்டிருக்கும் தொழில் மூலம் கிடைக்கும் தொகை அந்த தொழில் அல்லது கல்வியுடன் நேரடியாக தொடர்புபடின் அந்த மற்றைய அரசில் வரி விலக்களிப்புக்குள்ளாகும்.*

*2. தொழில் மூலம் கிடைக்கும் ஊதியம் தொடர்பாக 1 ஆம் பந்தியின் கீழ் கிடைக்கும் வரி விலக்களிப்பு வருடமொன்றுக்கு 3,000 அமெரிக்க டொலருக்கு சமனான தொகையை விஞ்சுதல் ஆகாது.*

*3. இவ் உறுப்புரையின் மூலமான பயன்களை மேற்கொள்ளும் கல்வி அல்லது பயிற்சியை பூரணப்படுத்துவதற்கு நியாயமாக அல்லது வழமையாக தேவைப்படும் அத்தகைய கால எல்லைக்கு மாத்திரம் வழங்கப்படல் வேண்டும் என்ற போதிலும் எந்தவோர் சந்தர்ப்பத்திலும் இவ் உறுப்புரையின் அந்த பயன்கள் எவரேனுமொருவருக்கு அவர் குறிப்பிட்ட மற்றைய ஒப்பந்த அரசுக்கு முதலாவதாக வந்த நாள் தொடக்கம் தொடர்ந்தும் ஆறு வருடங்களுக்கு மேலாக உரித்துடையதாக கூடாது.*

***உறுப்புரை 22***

*ஏனைய வருமானம்*

*1. இந்த உடன்படிக்கையின் முற்போந்த உறுப்புரைகளில் குறிப்பிடப்படாத சந்தர்ப்பத்தில் ஒப்பந்த அரசொன்றில் வதியுநபரொருவரின் வருமான விடயங்கள் அத்தகைய ஒப்பந்த அரசில் மாத்திரமே வரி விதிக்கப்படலாம்.*

*2. 6 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அசைவற்ற ஆனத்திலிருந்து பெறப்படும் வருமானம் தவிர்ந்த வருமானத்திற்கு அத்தகைய வருமானத்தைப் பெறுபவர் ஒப்பந்த அரசொன்றின் வதியுநபரொருவராகவிருந்து மற்றைய ஒப்பந்த அரசில் அங்கமைந்துள்ள நிரந்தரத் தாபனமொன்றினூடாக தொழிலைக் கொண்டு நடாத்தி அல்லது அந்த மற்றைய ஒப்பந்த அரசில் அங்கமைந்துள்ள நிலையான தளமொன்றிலிருந்து சுதந்திரமான தனிப்பட்ட சேவைகளைப் புரியின் அத்துடன் வருமானம் செலுத்தப்படும் உரிமை அல்லது ஆதனம் தொடர்பான அத்தகைய நிரந்தரத் தாபனத்துடன் அல்லது நிலையான தளத்துடன் பயனுள்ள வகையில் கொடுக்கப்பட்டிருப்பின் 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகா, இவ்விடத்தில் 7 ஆம் அல்லது 14 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் விடயத்திற்கேற்ப ஏற்புடையனவாகும்.*

*3. 1 ஆம் மற்றும் 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எது எவ்விதமிருப்பினும் ஒப்பந்த அரசொன்றின் வதியுள்ளனர் ஒருவர் வருமான விடயங்கள் இவ் உடன்படிக்கையின் முற்போந்த உறுப்புரைகளில் குறிப்பிடப்படாததும் மற்றைய ஒப்பந்த அரசின் மூலங்களிலிருந்து வருமானம் உழைப்பின் மற்றைய ஒப்பந்த அரசில் வரிவிதிக்கப்புக்குள்ளாக்கலாம்.*

***உறுப்புரை 23***

*இரட்டை வரி விதிப்பின் நீக்கத்துக்கான முறைகள்*

*1. ஒப்பந்த அரசொன்றில் அதிகாரத்திலுள்ள சட்டங்கள் அந்த சட்டங்களுக்கு முரணான ஏற்பாடுகள் இவ் உடன்படிக்கையில் செய்யப்பட்டிருப்பின் தவிர அவ்வந்த ஒப்பந்த அரசுகள் தொடர்பில் வருமானத்திற்கான வரி விதிப்பனவு தொடர்பில் ஆளப்படும். இரண்டு ஒப்பந்த அரசுகளிலும் வருமான வரிவிதிக்கப்படும் பொழுது இரட்டை வரிவிதிப்பனவிலிருந்து வழங்கப்படும் நிவாரணம் இந்த உறுப்புரைகளின் பின்வரும் பந்திகளுக்கு அமைவாக வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*2. இந்தியாவில் -*

*(அ) இந்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கமைய இந்திய வதியுனர் ஒருவர் இலங்கையில் வரி அறவிடப்படக்கூடிய வருமானத்தை உழைக்கும் போது இந்தியா அந்த வதியுனரின் வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரியில் இலங்கையில் செலுத்திய வரிக்கு சமனான தொகையை கழிக்க இடமளிக்க வேண்டும் ;*

*எவ்வாறு இருப்பினும், அத்தகைய கழிப்பனவு கழித்தல்களை வழங்குவதற்கு முன்னர் கணிப்பீடு செய்யப்பட்ட இலங்கையில் வரிக்குள்ளாகும் வருமானத்திற்கு ஒத்ததாக கூடிய வரியின் பகுதியை விஞ்சுதலாகாது ;*

*(ஆ) ஒப்பந்தத்தின் ஏதேனும் ஏற்பாடுகளுக்கமைய இந்தியாவில் வதியுனர் ஒருவர் உழைக்கும் வருமானம் இந்தியாவில் வரி விலக்களிப்பை பெறுவதுடன் மீதி வருமான அடிப்படையில் வரியினை கணிப்பீடு செய்யும் போது வரி விலக்களிப்பு வழங்கப்பட்ட வருமானத்தையும் இந்தியா கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.*

3. இலங்கையில் -

(அ) இந்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கையில் வதியுனர் ஒருவர் இந்தியாவில் வரி அறவிடப்படக்கூடிய வருமானத்தை உழைக்கும் போது இலங்கை அந்த வதியுனரின் வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரியில் இந்தியாவில் செலுத்திய வரிக்கு சமனான தொகையை கழிக்க இடமளிக்க வேண்டும்.

எவ்வாறு இருப்பினும் அத்தகைய கழிப்பனவு கழித்தல்களை வழங்குவதற்கு முன்னர் கணிப்பீடு செய்யப்பட்ட இந்தியாவில் வரிக்குள்ளாகும் வருமானத்தை ஒத்ததாக கூடிய வரியின் பகுதியை விஞ்சுதலாகாது ;

(ஆ) ஒப்பந்தத்தின் ஏதேனும் ஏற்பாடுகளுக்கமைய இலங்கையில் வதியுனர் ஒருவர் உழைக்கும் வருமானம் இலங்கையில் வரி விலக்களிப்பை பெறுவதுடன் மீதி வருமான அடிப்படையில் வரியினை கணிப்பீடு செய்யும் போது வரி விலக்களிப்பு வழங்கப்பட்ட வருமானத்தையும் இலங்கை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**உறுப்புரை 24**

பாகுபாடு காட்டமை

1. ஒப்பந்த அரசொன்றில் நாட்டினத்தவர்கள் மற்றைய ஒப்பந்த அரசில் மற்றைய ஒப்பந்த அரசின் நாட்டினத்தவர்கள் உட்பட்டுள்ள அல்லது உட்படக்கூடிய வரிவிதிப்புக்குப் புறம்பான அதிகமான அல்லது கூடிய சுமையுடைய எந்தவொரு வரிவிதிப்புக்கும் அல்லது அத்தோடு தொடர்புடைய தேவைகளுக்கும் விசேடமாக வதிவிடயங்கள் தொடர்பாக உட்படுத்தப்படலாகாது. இந்த ஏற்பாடு 1 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் எவ்விதமிருப்பின் ஒப்பந்த அரசுகளும் ஒன்றில் அல்லது இரண்டிலும் வதியுநரல்லாத ஆட்களுக்கும் ஏற்புடைத்தாகும்.

2. ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் வைத்திருக்கும் நிர்ந்தர நிறுவனத்தின் மீது அதே காரியங்களில் ஈடுபடுகின்ற மற்றைய அரசின் தொழில் முயற்சிகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் வரிவிதிப்புகளை பார்க்க குறைந்த சலுகை கிடைக்கும் மற்றைய வரிவிதித்தலாகாது. இந்த ஏற்பாடு ஒப்பந்த நாடொன்று தனது சொந்த வதியனறுக்கு குடியியல் தகுதிநிலை குடும்பப் பொறுப்புகள் காரணமாக வரிவிதிப்பு நோக்கங்களுக்காக வழங்கும் ஏதேனும் தனிப்பட்ட விசேட தொகைகள், நிவாரணங்கள் அல்லது கழிப்பனவுகளை மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநர்களுக்கு வழங்குவதற்காக இவ் ஏற்பாட்டின் மூலம் கட்டுப்பட்டுள்ளது என விளங்கிக்கொள்ளல் ஆகாது.

இந்த ஏற்பாடுகளினால் குறித்துரைக்கப்பட்ட ஒப்பந்த அரசில் உள்ள மற்றைய ஒப்பந்த அரசின் கம்பனியொன்றில் நிரந்தர நிறுவனமொன்றில் இலாபத்தில் முதலாவதாக குறிப்பிடப்பட்ட ஒப்பந்த அரசின் அதற்கு சமனான இலாபம் மீது விதிக்கப்பட்ட வரி வீதத்தையும் விட கூடிய வீதங்கள் வரி அறவிடப்படுவது தவிர்க்கப்படுவதாக அல்லது 7 ஆவது உறுப்புரையின் 3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுடன் முரண்படுவதாக கருதுதலாகாது.

3. 9 ஆம் உறுப்புரையின் I ஆம் பந்தி, II ஆம் உறுப்புரையின் 7 ஆம் பந்தி அல்லது 12 ஆம் உறுப்புரையின் 6 ஆம் பந்திகளில் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாக்குதல் தவிர, ஒப்பந்த அரசின் தொழில் முயற்சியொன்றினால் மற்றைய ஒப்பந்த அரசின் வதியுரொருவருக்குச் செலுத்தப்படும் வட்டி, வேத்துரிமை, மற்றும் பிற பகிர்ந்தளிப்புக்கள், அத்தகைய தொழில் முயற்சியின் வரிவிதிக்கற்பாலதான இலாபங்களைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, முதற்குறிப்பிட்ட அரசின் வதியுநருக்குச் செலுத்தப்பட்டவை போன்ற அதே நிலைமைகளில் கழிப்பாலனவையாகும்.

4. மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவரால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களால் முழுதாக அல்லது பகுதியாக நேரடியாக அல்லது மறைமுகமாக உரிமை கொள்ளப்படும் அல்லது அங்கு கட்டுப்படுத்தப்படும் மூலதனத்தைக் கொண்டுள்ள ஒப்பந்த அரசின் தொழில் முயற்சிகள் முதற் குறிப்பிட்ட அரசின் அம்முதற் குறிப்பிட்ட அரசில் அம்முதற் குறிப்பிட்ட அரசின் அதையொத்த தொழில் முயற்சிகள் உட்பட்டுள்ள அல்லது உட்படக்கூடிய வரிவிதிப்புக்கும் அதோடு தொடர்புடைய தேவைகளுக்கும் புறம்பான அல்லது கூடிய சமையுள்ள வரிவிதிப்புக்கும் அதனோடு தொடர்புடைய தேவைகளுக்கும் உட்படுத்தப்படலாகாது.

5. இப்பிரிவின் ஏற்பாடுகள், இந்த ஒப்பந்தத்தில் அடங்கும் வரிகள் தொடர்பாக ஏற்புடையதாகும்.

**உறுப்புரை 25**

இருவாயினொத்த உடன்பாட்டு நடைமுறை

1. ஒப்பந்த நாடொன்றின் வதியுநர் ஒருவர் நாடுகளொன்றின் அல்லது இரண்டினதும் நடவடிக்கைகளின் பயனாகத்தான் இவ்வுடன்படிக்கைக்கு மாறான முறையில், வரிவிதிக்கப்படுவதாக அல்லது வரிவிதிக்கப்படுவரென எண்ணுவாராயின், அவ்வரசுகளின் வரிவிதிப்புச் சட்டங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பரிகாரங்கள் எவ்வாறிருப்பினும், அவர் தான் வதியும் ஒப்பந்த நாட்டின் தகுதி வாய்ந்த அதிகாரிக்குத் தனது விடயத்தைச் சமர்ப்பிக்கலாம். அல்லது அவரது விடயம் 24 ஆம் உறுப்புரையின் I ஆம் பந்தியின் கீழ் வரின் அவர் அந்த நாட்டினத்தவராக உள்ளாரோ அந்த ஒப்பந்த நாட்டிற்குள் சமர்ப்பிக்கலாம். அவ்விடயம், இவ்வுடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கமையாத வரிவிதிப்பின் பயனாக எடுத்த நடவடிக்கை பற்றி முதலாவது அறிவித்தல் கிடைத்த மூன்றாண்டுக்குள் சமர்பிக்கப்பட வேண்டும்.

*2. தகுதிவாய்ந்த அதிகாரிக்கு, அவ்வாட்சேபனை நியாயமானதாகத் தோன்றியும் தாமாக ஒரு பொருத்தமான தீர்வுக்கு வரமுடியாமல் இருப்பின், அவர் இவ்வுடன்படிக்கைக்கு மாறான முறையிலான வரிவிதிப்பைத் தவிர்க்கும் பொருட்டு மற்றைய ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியுடனான இருவாயினொத்த உடன்பாட்டின் மூலம் அவ்விடத்தைத் தீர்த்து வைக்க முயற்சிக்கலாம் எடுக்கப்படும் எந்த உடன்பாடும் ஒப்பந்த நாடுகளின் உள்ளூர்ச் சட்டத்தின் எந்த நேர வரைறையையும் பொருட்படுத்தாது நடைமுறைப்படுத்தப்படும்.*

*3. ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் இவ்வுடன்படிக்கையின் பொருள்கோடல் அல்லது பிரயோகம் குறித்து எழும் இடர்பாடுகள் அல்லது சந்தேகங்களை இருவாயினொத்த உடன்பாட்டின் மூலம் தீர்த்துக்கொள்ள முயற்சிப்பர். அத்துடன் இவ்வுடன்படிக்கையில் ஏற்பாடளிக்கப்படாத விடயங்களின் இரட்டை வரிவிதிப்பு நீக்கத்திற்கும் ஒருவரையொருவர் கலந்தாலோசிக்கலாம்.*

*4. ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் முன்னர் குறிப்பிட்ட பந்திகளின் விடயத்திற்கு உடன்பாட்டை அடையும் நோக்கத்துக்கான ஒருவரோடு நேரடியாக கடிதங்கள் மூலம் தொடர்பு கொள்ளலாம். ஓர் உடன்பாட்டிற்கு வரும் நோக்கத்திற்காக ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகளின் பிரதிகள் ஒருவரோடொருவர் அபிப்பிராய வாய்மூல பரிவர்த்தனையை மேற்கொள்ள கருதும் பட்சத்தில் ஒப்பந்தகாரர்களின் உரிய அதிகாரிகளின் பிரதிநிதிகள் கொண்ட, குழுவொன்றினால் அவ்வாறு கருத்துக்களைப் பரிமாரிக் கொள்ளலாம்.*

**உறுப்புரை 26**

தகவற் பரிமாற்றம்

*1. இவ்வுடன்படிக்கையின் ஏற்பாடுகள் அல்லது வரிவிதிப்புகள் இவ்வுடன்படிக்கைக்கு முரணாகாமல் இருக்கும் வரை இவ்வுடன்படிக்கையின் எற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அல்லது ஒப்பந்த அரசுகள் அவ்வாறு அவற்றின் அரசியல் உப பிரிவுகள் அல்லது உள்ளூர் அதிகார சபையின் சார்பிலான வரிகளின் ஒவ்வொருவராக அல்லது விபரம் சம்பந்தமான உள்ளூர் சட்டங்களை நிர்வகிப்பதற்கு அல்லது நடைமுறைப்படுத்துவதற்கு தேவைப்படும் ஆவணங்கள் அல்லது அவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் உள்ளடங்கலாக அத்தகைய தகவலை ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் பரிமாற்றிக்கொள்ள வேண்டும். தகவல் பரிமாற்றம் 1 ஆம், 2 ஆம் உறுப்புரையில் வரையறுக்கப்படவில்லை.*

*2. ஒப்பந்த அரசொன்றில் 1 ஆம் பந்தியின் கீழ் பெறப்பட்ட ஏதேனும் தகவல் குறித்த அரசின் உள்நாட்டுச் சட்டங்களின் கீழ் பெறப்பட்ட தகவலின் அமைப்பிலேயே இரகசியமாகப் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் 1 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு வரிகளுடன் தொடர்பான மேன்முறையீடுகளை தீர்மானிப்பது தொடர்பில் சட்டத்தினைச் செயற்படுத்தல் அல்லது வழக்குத் தொடருதல் தொடர்பில் வரி மதிப்பீடு அல்லது சேகரிப்பு தொடர்பிலான ஆட்களுக்கு அல்லது அதிகாரிகளுக்கு (நீதிமன்றங்கள் மற்றும் நிர்வாகக் குழுமங்கள் உள்ளடங்களாக) மாத்திரம் அத்தகைய தகவல்களை வெளிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய தகவல்களைப் பயன்படுத்த முடியும். அவர்கள் அவற்றினை திறந்த நீதிமன்ற விசாரணைகளில் அல்லது நியாயத் தீர்ப்புகளில் வெளிப்படுத்த முடியும். மேற்கூறியவை எது எவ்வாறிருப்பினும் ஒப்பந்த அரசொன்றினால் பெறப்பட்ட தகவல் இரண்டு அரசுகளின் சட்டங்களின் கீழ் வேறு நோக்கங்களுக்காக அத்தகைய தகவல் பயன்படுத்தப்படலாமெனும் போதும் வழங்கிய அரசின் தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய பயன்பாட்டிற்கு அதிகாரமளித்துள்ள போதும் வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம்.*

*மேற்கூறியவை எது எவ்வாறிருப்பினும் ஒப்பந்த அரசொன்றினால் பெறப்பட்ட தகவல் இரண்டு அரசுகளின் சட்டங்களின் கீழ் வேறு நோக்கங்களுக்காக அத்தகைய தகவல் பயன்படுத்தலாமெனும் போதும் வழங்கிய அரசின் தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய பயன்பாட்டிற்கு அதிகாரமளித்துள்ள போதும் வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம்.*

*3. இவ்வுறுப்புரையின் (1) மற்றும் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஒப்பந்த நாடுகளின் மீது பின்வரும் கடமைப்பாடுகளை விதிக்கின்றதென எச்சந்தர்ப்பத்திலும் கருதுதல் ஆகாது.*

*(அ) இவ்வொப்பந்த அரசின் அல்லது மற்றைய ஒப்பந்த அரசின் சட்டங்களுக்கும் நிர்வாக முறைக்கும், முரண்பட்ட வகையிலான நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்தல் ;*

*(ஆ) அவ்வொப்பந்த அரசின் அல்லது மற்றைய ஒப்பந்த அரசின் சட்டங்களின் கீழ் அல்லது சாதாரண நிர்வாக முறையின் கீழ் பெறமுடியாத (அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் உள்ளடங்கலாக) ஆவண விபரங்களை வழங்குதல்;*

*(இ) ஏதாயினும், வணிக வியாபார,கைத்தொழில், வர்த்தக உயர்தொழில் இரகசியங்களை அல்லது வணிக முறைமை வெளிப்படுத்தும் தகவலை வெளிப்படுத்தல் அரச கொள்கைகளுக்கு முரணான ஏதேனும் தகவல் வழங்கல்.*

*4. மற்றைய ஒப்பந்த அரசுக்கு வரிவிதிப்பு நோக்கங்களுக்காக அத்தகைய தகவல்கள் தேவைப்படாத போதிலும் இந்த உறுப்புரைக்கு அமைவாக ஒப்பந்த அரசொன்றினால் தகவல் தேவைப்படுத்தப்படுமாயின்; தேவைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெறுவதற்கு மற்றைய ஒப்பந்த அரசு அதனது தகவல் சேகரிப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்துதல் வேண்டும். வழக்குத் தொடரில் உள்ளடக்கப்பட்டுள்ள கடப்பாடானது 3 ஆம் பந்தியின் வரையறைகளுக்குட்பட்டதாகும். அத்தகைய தகவல்களை உள்நாட்டு அக்கறை காணப்படாத போது தகவல்களை வழங்குவது முழுமையாக ஒப்பந்த அரசொன்றினை அங்கீகரிப்பதற்கு முடியுமானதாக இருக்கும்.*

5. வங்கியொன்று, பிற நிதி நிறுவனங்கள், முகவராண்மையொன்றில் நியமனதாரர் அல்லது பதில் கடமை புரியும் ஆளொருவர் அல்லது நம்பகத் தகுதி அல்லது ஆளொருவரில் உரித்து அக்கறை தொடர்பானவை என்பவற்றினால் கொள்ளப்பட்ட தகவல் வழங்குவதற்கு ஒப்பந்த அரசொன்றிற்கு அங்கீகாரம் வழங்குவதற்கு பந்தி 3 இன் ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டதாக இருக்க முடியாது.

**உறுப்புரை 27**

வரி சேகரிப்பதற்கான ஒத்துழைப்புகள்

1. வருமானக் கோரிக்கைகளைச் சேகரிப்பதில் ஒப்பந்த அரசுகள் ஒன்றுக்கு ஒன்று ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும். இவ் உறுப்புரையை ஏற்புடையதாக்கும் முறையினை ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் பரஸ்பர உடன்பாட்டின் அடிப்படையில் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

2. இவ் உறுப்புரையில் பயன்படுத்தப்பட்டுள்ள "வருமானக் கோரிக்கைகள்" என்ற வாசகம், ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படுகின்ற வரிகள் தொடர்பில் செலுத்தவேண்டிய தொகை, அதனுடன் தொடர்புடைய வட்டி, தண்டம், அறவீடுகள் அல்லது பிணைச் செலவுகள் என்பவற்றைக் குறிக்கும்.

3. ஒப்பந்த அரசொன்றின் வருமானக் கோரிக்கையொன்றை அவ் ஒப்பந்த அரசின் சட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்த முடியுமான சந்தர்ப்பத்திலும் அச்சந்தர்ப்பத்தில் அவ் ஒப்பந்த அரசின் சட்டங்களின் கீழ் அவ்வருமான அறவீட்டைத் தவிர்க்க முடியாத ஆளொருவர் அவ் வருமானக் கோரிக்கையைச் செலுத்தவேண்டியுள்ள விடத்து, அவ் வருமானக் கோரிக்கையை அவ் ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியின் கோரிக்கைக்கு இணங்க, மற்றைய ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரி அறவிடும் பணியைப் பொறுப்பேற்றல் வேண்டும். அவ்வருமானக் கோரிக்கை, மற்றைய ஒப்பந்த அரசின் வருமானக் கோரிக்கையாகக் கருதப்பட்டு தமது அரசில் வரிகளை நடைமுறைப்படுத்துதலுடனும் அறவிடுதலுடனும் தொடர்புடைய அவ் அரசின் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க அம்மற்றைய ஒப்பந்த அரசினால் அறவிடப்படுதல் வேண்டும்.

4. ஒப்பந்த அரசொன்றின் வருமானக் கோரிக்கையொன்று அவ்வொப்பந்த அரசின் சட்டங்களின் கீழ் அறவிடப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் பிணை ஏற்பாடுகளைச் செய்ய முடியுமாகவுள்ள சந்தர்ப்பத்தில், அவ் ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க அவ்வருமானக் கோரிக்கைக்கான பிணை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணியினை மற்றைய ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரி பொறுப்பேற்றல் வேண்டும். அம்மற்றைய ஒப்பந்த அரசினால் அத்தகைய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில், முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசின் வருமானக் கோரிக்கையை நடைமுறைப்படுத்த முடியாத அல்லது அவ்வருமானக் கோரிக்கையை அறவிடுவதற்கான உரிமையைக் கொண்டுள்ள ஆளொருவரினால் செலுத்தப்பட வேண்டியதும், அவ்வருமானக் கோரிக்கையை அம் மற்றைய ஒப்பந்த அரசின் வருமானக் கோரிக்கையாகக் கருதி, தனதுத சட்ட எற்பாடுகளுக்கு இணங்க அவ்வருமானக் கோரிக்கையுடன் தொடர்புடைய வகையில் அம்மற்ற ஒப்பந்த அரசு பிணை ஏற்பாடுகளை மேற்கெள்ளுதல் வேண்டும்.

5. இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் அந்த ஒப்பந்த அரசின் உள்ளூர் சட்டங்களின் கீழ் அறவீட்டின் எல்லா அனுமதிக்கப்படற்பாலதான நடவடிக்கைகளையும் எடுத்து முடித்த பின்னர் ஒப்பந்த நாடொன்றின் வேண்டுகோளின் மீது மாத்திரமே அழிக்கப்படல் வேண்டும்.

6. 3 ஆம் , 4 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாது 3 ஆம், 4 ஆம் பந்திகளின் நோக்கங்களுக்காக ஒப்பந்த அரசொன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வருமானக் கோரிக்கையொன்றை காலவரையறைகளுக்கு உட்படுத்தவோ அல்லது அவ்வருமானக் கோரிக்கையின் தன்மையின் அடிப்படையில் அவ் ஒப்பந்த அரசின் சட்டங்களின் கீழ் வருமானக் கோரிக்கையில் தாக்கம் செலுத்தும் ஏதேனும் முன்னுரிமை வழங்கலை மேற்கொள்ளவோ கூடாது. அத்துடன் 3 ஆம் அல்லது 4 ஆம் பந்திகளின் நோக்கங்களுக்காக ஒப்பந்த அரசு ஒன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வருமானக் கோரிக்கையொன்றுக்கு மற்றைய ஒப்பந்த அரசின் சட்டங்களின் கீழ் செல்லுபடியாகும் ஏதேனும் முன்னுரிமையொன்றை முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் வழங்கக் கூடாது.

7. ஒப்பந்த அரசொன்றின் வருமானக் கோரிக்கையொன்றின் இருப்பு அல்லது செல்லுபடியாகும் தன்மை அல்லது தொகை தொடர்பான சட்டரீதியான செயற்பாடுகளை மற்றைய ஒப்பந்த அரசின் நீதிமன்றத்தின் அல்லது நிர்வாக சபையின் முன் நிறுத்த வேண்டிய அவசியமில்லை இந்த உறுப்புரையிலுள்ளவெதுவும் மற்றைய ஒப்பந்த அரசின் நீதிமன்றத்தில் அல்லது நிர்வாக சபையின் முன் இத்தகைய நடவடிக்கைகளுக்கான ஏதேனும் உரிமையை உருவாக்குவதாக அல்லது வழங்குவதாக கருதப்படுதல் ஆகாது.

8. 3 ஆம் அல்லது 4 ஆம் பந்தியின் கீழ் ஒப்பந்த அரசு ஒன்றினால் கோரப்பட்டதன் பின்னர் மற்றைய ஒப்பந்த அரசு குறித்த வருமானக் கோரிக்கையை அறிவிட்டு முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் வரவு வைக்க முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முதலில் குறிப்பிட்ட அரசில் வருமானக் கோரிக்கை முடிவடைய முடியும்.

(அ) 3 ஆம் பந்தியின் கீழ் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசின் சட்டத்தின் கீழ் செயற்படுத்த முடியுமானவரும் அச்சந்தர்ப்பத்தில் அவ் ஒப்பந்த அரசின் சட்டத்தின் கீழ் அறவீட்டைத் தவிர்க்க முடியுமானவருமான ஆளொருவரினால் செலுத்தப்பட வேண்டியவருமானக் கோரிக்கையொன்று அல்லது ;

(ஆ) 4 ஆம் பந்தியின் கீழ் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் அது அறவிடப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்கில் அவ் உறுப்பு நாடு அதன் சட்டரீதியான பிணை நடவடிக்கைகளை எடுக்க முடியுமான வருமானக் கோரிக்கையொன்று ;

(இ) இது தொடர்பில் முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரி மற்றைய ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு உரிய முறையில் அறிவித்தல் வேண்டும். மற்றைய ஒப்பந்த அரசின் விருப்பத்தின் அடிப்படையில் முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசு தனது கோரிக்கையை இடைநிறுத்தவோ அல்லது வாபஸ்பெறவோ முடியும்.

9. இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஊடாக கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஒரு ஒப்பந்த அரசின் கடப்பாடுகள் விதியாகும் என எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கருதக் கூடாது.

(அ) அவ் ஒப்பந்த அரசின் அல்லது மற்றைய ஒப்பந்தஅரசின் சட்டங்களுக்கும் நிர்வாக நடைமுறைகளுக்கும் மாற்றமான நிர்வாக முறைகளைப் பின்பற்றுதல் ;

(ஆ) அரசாங்கக் கொள்கைக்கு மாற்றமான நடவடிக்கைகளை எடுத்தல் ;

(இ) அறவீடு அல்லது பிணை ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அல்லது மற்றைய ஒப்பந்த அரசு அதன் சட்டங்களின் அல்லது நிர்வாக நடைமுறைகளின் கீழ் எடுக்க முடியுமான நியாயமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திராதவிடத்து ஒத்துழைப்பு வழங்குதல் ;

(ஈ) அவ் ஒப்பந்த அரசுக்கான நிர்வாகப் பொறுப்பினை மற்றைய உறுப்பு அரசினால் உழைக்கப்படும் பயன்களுக்கான தெளிவான விகிதங்களாக இல்லாத சந்தர்ப்பத்தில் ஒத்துழைப்பு வழங்குதல்.

**உறுப்புரை 28**

நலன்களை மட்டுப்படுத்தல்

1. இவ் உறுப்புரையில் வேறு வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் தவிர ஒப்பந்த அரசொன்றில் வதிகின்றவரும் மற்றைய ஒப்பந்த அரசிலிருந்து வருமானத்தை பெறுகின்ற வருமானத்தை பெறுகின்ற வருமான ஆளொருவர் (தனியொருவர் தவிர்ந்த) அத்தகைய ஆள் 2 ஆம் பந்தியில் வரையறுக்கப்பட்டவாறான தகைமைகளை கொண்டிருப்பதுடன் ஏதேனும் அத்தகைய நலன்களை பெறுவதற்கான இவ் ஒப்பந்தத்தின் வேறு நிபந்தனைகளை எதிர்நோக்கியும் இருந்தால் ஒப்பந்த நாடொன்றில் வதிபவருக்கு மட்டுமே உடபன்பட்டுக் கொண்ட இவ்வொப்பந்தத்தின் எல்லா நலன்களுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

2. ஒப்பந்த அரசொன்றிலுள்ள ஆளொருவர் -

(அ) அரச தொழில் முயற்சி ;
(ஆ) ஒப்பந்த அரசுகளில் ஒன்றில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று;

(i) அதன் பங்குத் தொகுதிகளின் பிரதான வகுப்பு இவ் உறுப்புரையின் 5 ஆம் பந்தியில் வரையறுக்கப்பட்டவாறாக அங்கீகரிக்கப்பட்ட பங்கு பரிவர்த்தனையொன்றில் நிரல்படுத்தப்பட்டிருப்பின் அத்துடன் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பங்கு பரிவர்த்தனைகளில் கிரமமாக வியாபாரப்படுத்தப்படின் ; அல்லது

(ii) கம்பனியின் கூட்டுமொத்த வாக்கு அல்லது பங்குகளின் பெறுமதியின் குறைந்தபட்சம் 50% ஒப்பந்த அரசுகளின் ஒன்றின் வதியுநரான ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட தனியாட்களினால் அல்லது/அத்துடன் ஒப்பந்த அரசுகளிலொன்றில் கூட்டிணைக்கப்பட்ட வேறெவரேனும் ஆட்களினால் நேரடியாக அல்லது மறைமுகமாக சொந்தமாக வைத்திருக்கப்படின் ஒப்பந்த அரசுகளிலொன்றில் வதிக்கின்ற ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களினால் நேரடியாக அல்லது மறைமுகமாக கூட்டுமொத்த வாக்கு அல்லது பங்குகளின் பெறுமதி அல்லது நலன்கள் வட்டியின் குறைந்தபட்சம் 50% இனை கொண்டிருப்பின் அல்லது ;

(iii) (இ) பங்குடமையொன்றில் அல்லது கழகமொன்றில் ஒப்பந்த அரசுகளில் ஒன்றில் வதிகின்ற ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட தனியாட்களினால் அல்லது/அத்துடன் ஒப்பந்த நாடுகளில் ஒன்றில் கூட்டிணைக்கப்பட்ட வேறு ஆட்களினால் குறைந்தபட்சம் 50% மான அல்லது அதற்கு மேற்பட்ட நலன்சார் வட்டி சொந்தமாக வைத்திருப்பின் ஒப்பந்த நாடுகளிலொன்றில் வதியும் ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட ஆட்களினால் நேரடியாக அல்லது மறைமுகமாக மொத்த வாக்கு அல்லது பங்குகளின் பெறுமதி அல்லது நலன்சார் வட்டி என்பவற்றின் 50% மான இனை ; அல்லது

(ஈ) ஒப்பந்த நாடுகளொன்றில் பிரதான தொழிற்பாட்டை கொண்டு நடாத்துகின்ற தரும நிறுவனங்கள் அல்லது வேறு ஏதேனும் வரி தவிர்ப்பு தொழில் முயற்சியாயின் அவர் அரசிறையாண்டிற்கான தகைமைபெற்ற ஆளாவார்.

ஆயின் மேற்குறிப்பிடப்பட்ட ஆள், அவ்வாளின் மொத்த வருமானத்தின் 50% ற்கு அதிகமானவை அவ்வாள் வதிக்கின்ற அரசில் இவ் உடன்படிக்கையினால் வரி கணிப்பிட்டு நோக்கத்திற்காக மேவப்படக்கூடிய கழிப்பனவு செய்யக்கூடிய கொடுப்பனவில் ஒப்பந்த அரசுகளிலொன்றில் வதியாத ஆட்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ வரி மதிப்பீட்டு ஆண்டிற்காக செலுத்தப்படுகின்ற அல்லது செலுத்தற்பாலதாக உள்ளவிடத்து இவ் உடன்படிக்கையின் நலன்களுக்கு

உரித்துடையவரார் (ஆனால் சாதாரண வியாபார சேவைகள் அல்லது அறியக்கூடிய ஆதனம் என்பவற்றிற்கான கொடுப்பனவு மற்றும் ஒப்பந்த அரசுகளிலொன்றில் அமைந்துள்ள வங்கியின் நிரந்தர தாபனத்துடன் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கூறப்பட்ட வங்கியொன்றின் நிதிக் கடப்பாடுகள் தொடர்பிலான கொடுப்பனவுகள் என்பன உள்ளடங்காது.)

3. ஆள் தான் வதிகின்ற அரசில் தொழிலொன்றை திறனாக கொண்டு நடாத்தின் (இச் செயற்பாடுகள் வங்கித்தொழில், காப்புறுதி அல்லது பாதுகாப்பு செயற்பாடுகளாக இருந்தாலன்றி வதியுநர் சொந்த கணக்கிற்கான முதலீடுகளை செய்தலும் முகாமை செய்தலும் தவிர்ந்த ஏனைய தொழில்கள்) மற்றும் அத்தொழில் தொடர்பில் அல்லது அத்தொழிலின் இடைநேர்விளைவுகின்றமை தொடர்பில் மற்றைய ஒப்பந்த அரசுகளிலிருந்து வருமானம் பெறப்படின் மற்றும் அத்தகைய நலன்களை பெறுவதற்காக உடன்படிக்கையின் ஏனைய நிபந்தனைகளை வதியுநர் திருப்தி செய்வாராயின் 1 ஆம், 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாதவாகாது என்பதுடன் ஒப்பந்த அரசொன்றின் வதியுநரெருவர் மற்றைய அரசுகளிடமிருந்து பெறுகின்ற வருமான விடயமொன்று தொடர்பில் உடன்படிக்கையின் நலன்களுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

4. மற்றைய ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய ஆளின் தாபனம் அல்லது கொள்ளல் அல்லது பராமரிப்பு மற்றும் அதன் தொழிற்பாட்டுக்கு நடவடிக்கை என்பன இவ்வுடன்படிக்கையின் கீழ் நலன்களை பெறுகின்ற அதன் பிரதான நோக்கங்களுக்காக முதன்மையானதாக இராது என தீர்மானித்தால் ஆயினும் ஒப்பந்த அரசொன்றின் வதியுநரொருவருக்கு இவ்வுடன்படிக்கையின் நலன்கள் வழங்குதல் வேண்டும்.

5. இவ் உறுப்புரையின் நோக்கங்களுக்காக ‘இனம் காணப்பட்ட பங்கு பரிவர்த்தனை’ என்பது -

(அ) இந்தியாவில், 1956 ஆம் ஆண்டின் பிணை ஒப்பந்தங்கள் (ஒழுங்குவிதி) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் மாத்திரம் அரசாங்கத்தினால் அப்போதைக்கு அங்கீகரிக்கப்பட்ட பங்கு பரிவர்த்தனையொன்று ;

(ஆ) இலங்கையில் இலங்கை பிணை மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பெற்ற ஏதேனும் பங்கு பரிவத்தனை ;

(இ) இவ் உறுப்புரை நோக்கங்களுக்காக தகுதிவாய்ந்த அதிகாரிகளால் உடன்பட்ட ஏதேனும் வேறு பங்கு பரிவர்த்தனை.

6. இவ் உறுப்புரையின் முற்போந்த பந்திகளில் எது எவ்வாறிருப்பினும், ஏற்புடைத்தான வரிகளை தவிர்க்கும் பிரதான நோக்கங்கள் அல்லது பிரதான நோக்கங்களிலொன்றாக இருந்தவாறான அத்தகைய முறையில் அதன் அலுவல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பின் எவரேனும் ஆள் (தனியாட்கள் உள்ளடங்களாக) இவ் உறுப்புரையின் நலன்களுக்கு உரித்துடையவராதலாகாது.

**உறுப்புரை 29**

இராசதந்திர முகவர்களும் பேராளர் உத்தியோகத்தர்களும்

இவ்வுடன்படிக்கையின் பகுதியெதுவும் அனைத்துலகச் சட்டத்தின் பொது விதிகளின் கீழ் அல்லது விசேட உடன்படிக்கையின் எற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்டுள் இராசந்திர முகவர்கள், பேராளர் உத்தியோகத்தர்களின் நிதிச் சலுகைகளைப் பாதிக்கமாட்டாது.

**உறுப்புரை 30**

நடைமுறைப்படுத்தல்

1. இவ் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தமது சட்டத்தின் ஊடாகத் தேவையான நடைமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஒவ்வொரு ஒப்பந்த அரசும் இராஜதந்திர வழிமுறைகளில் மற்றைய அரசுக்கு எழுத்தில் அறிவிக்க வேண்டும்.

2. இவ் உறுப்புரையின் 1 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இவ் அறிவித்தல்களின் பின்னர் செய்யப்படும் அறிவித்தல் திகதியிலிருந்து இவ் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

3. இவ் ஒப்பந்த ஏற்பாடுகள் -

(அ) இந்தியாவில் இந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த ஆண்டினைத் தொடர்ந்துவரும் பஞ்சாங்க ஆண்டின் ஏப்பிறல் 01 ஆந் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற ஏதேனும் நிதியாண்டில் உழைத்துக் கொண்ட வருமானம் தொடர்பில்; மற்றும்

(ஆ) இந்தியாவில் இந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த ஆண்டினைத் தொடந்துவரும் பஞ்சாங்க ஆண்டின் ஏப்பிறல் 1 ஆந் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற ஏதேனும் வரி அறிவிடத்தக்க ஆண்டின் உழைத்துக் கொண்ட வருமானம் தொடர்பில்.

4. இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானம் மற்றும் மூலதனம் மீது வரி கொடாது தட்டிக் கழிப்பதை தடுப்பதற்குமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்திய குடியரசு அரசாங்கத்திற்கும் இடையிலான 1921 ஆம் ஆண்டின் சனவரி 27 ஆந் திகதியன்று கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை இவ் உறுப்புரையின் 3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகள் பயனுறுதியுடையனவாக வரும்போது முடிவுறுத்தப்பட்டு அமுல்படாது இருக்க வேண்டும்.

**உறுப்புரை 31**

முடிவுறுத்தல்

ஏதேனும் ஒரு ஒப்பந்த அரசினால் முடிவுறுத்தப்படும் வரை இப் ஒப்பந்தம் நடைமுறையில் இருத்தல் வேண்டும். ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஐந்து வருட காலத்தின் பின்னர் வரும் ஏதேனும் ஒரு பஞ்சாங்க வருடம் முடிவடைவதற்கு முன்னர் ஆகக் குறைந்தது ஆறு மாதங்களில் அல்லது அதற்கு முன்னர் இராஜதந்திர வழிமுறைகளில் முடிவுறுத்தல் தொடர்பான அறிவித்தல் ஒன்றை வழங்குவதன் ஊடாக ஏதேனும் ஒரு ஒப்பந்த அரசு இவ் ஒப்பந்தத்தை முடிவுறுத்த முடியும். அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் –

(அ) இந்தியாவில் இந்த அறிவித்தல் வழங்கப்பட்ட பஞ்சாங்க ஆண்டை அடுத்துவரும் ஏப்பிறல் முதலாம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் நிதியாண்டில் பெறப்பட்ட வருமானம் தொடர்பில் ;

(ஆ) இலங்கையில் இந்த அறிவித்தல் வழங்கப்பட்ட பஞ்சாங்க ஆண்டை அடுத்துவரும் ஏப்பிறல் முதலாம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் வரி அறவிடத்தக்க பெறப்பட்ட வருமானம் தொடர்பில்–

இதற்கு சாட்சியாக உரியவாறு அதிகாரம் ஒப்படைக்கப்பெற்ற இங்கு கீழே கையொப்பமிடுபவர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

ஒரே சமமான அதிகாரங்களைக் கொண்ட சிங்கள, ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் இணைப் பிரதிகளுடன் 2013, சனவரி 22 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது. பொருட்கோடலில் முரண்பாடுகள் ஏற்பாடுமிடத்து ஆங்கிலப் பிரதி மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒப்பம் : காமினி லஷ்மன் பீரிஸ் பா. உ.
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
அரசாங்கத்தின் சார்பாக

ஒப்பம் : சல்மான் குர்ஷித்
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்

இந்திய அரசின் சார்பாக

**வரைவேடு**

இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரி கொடாது தட்டிக் கழிப்பதைத் தடுப்பதற்குமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்திய குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் புது டில்லியில் வைத்து 2013, சனவரி 22 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை இவ் உடன்படிக்கையில் பாகமாக அமைகின்ற பின்வரும் ஏற்பாடுகளின் மீது உடன்பட்டுள்ளன.

(i) 7 ஆம் உறுப்புரையின் 1 ஆம், 2 ஆம் பந்திகள் தொடர்பில் ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தர தாபனமொன்றினூடாக பொருட்கள் அல்லது வணிக சரக்கினை விற்பனை செய்யுமிடத்து அல்லது வியாபாரத்தை கொண்டு நடாத்துமிடத்து அந்த நிரந்தர தாபனத்தின் இலாபங்கள் அந்த தொழில் முயற்சியினால் பெறப்பட்ட மொத்த தொகையாக தீர்மானிக்கப்படலாகாது. ஆனால் அத்தகைய விற்பனை அல்லது வியாபாரத்தின் நிரந்தர தாபனத்தின் செயற்பாட்டிற்கு சாட்டத்தக்கனவாக பெறப்பட்ட பாகத்தின் அடிப்படைலேயே தீர்மானிக்கப்படல் வேண்டும். அதேபோன்று ஆய்வு, வழங்கற் சேவைகள் அமைப்புகள் அல்லது சேர்ப்புகளிற்கான ஒப்பந்தமானது தொழில் முயற்சியானது நிரந்தர தாபனமொன்றை கொண்டுள்ளபோது அந்த நிரந்தர தாபனத்தின் இலாபமானது ஒப்பந்தத்தின் மொத்தப்பெறுமதி மீது தீர்மானிக்கப்படலாகாது. ஆனால் எந்த அரசில் நிரந்தரத்தாபனம் அமைந்துள்ளதோ அந்த அரசின் நிரந்தர தாபனத்தினால் பயனுறுதியுடன் கொண்டு நடாத்தப்படுகின்ற ஒப்பந்தத்தின் பாகத்தின் அடிப்படை மீது மாத்திரம் தீர்மானிக்கப்படல் வேண்டும் ;

(ii) இவ்வுடன்படிக்கை தொடர்பில் ஒப்பந்த அரசொன்றின் உள்ளூர் சட்டங்களின் ஏற்பாடுகள் ஏதேனும் நேரத்தின் மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநருக்கு அதிக நலன்பயப்பதாக இருப்பின் உள்ளூர் சட்டத்தின் அத்தகைய அதிக நலன்பயப்பதாக இருப்பின் உள்ளூர் சட்டத்தின் அத்தகைய அதிக நலன்பயக்கும் ஏற்பாடுகள் இவ்வுடன்படிக்கையின் ஏற்பாடுகளிலும் மேலோங்கி நிற்றல் வேண்டும் ;

(iii) உறுப்புரை 10 தொடர்பில் பங்கிலாபம் மீதான உடன்பட்ட 7.5% நிறுத்திவைத்த வரி வீதம் உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து மூன்று வருடத்தின் பின்னர் மீளாய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். மூன்று வருடங்களின் பின்னர் வரி வீதம் மீளாய்வு செய்யப்படாத பட்சத்தில் உடன்பட்டுக் கொண்ட 7.5% தொடர்ந்திருக்கும்.

இதற்குச் சாட்சியாக உரியவாறு அதிகாரம் பெற்றவாறு இவ் வரைவேட்டில் கைச்சாத்திட்டனர். ஒரே சமமான அதிகாரங்களைக் கொண்ட சிங்கள, ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் இணைப்பிரதிகளும் புது டில்லியில் வைத்து 2013, சனவரி 22 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது. பொருட்கோடலில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து ஆங்கிலப் பிரதி மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒப்பம் : காமினி லஷ்மன் பீரிஸ் பா. உ.
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
அரசாங்கத்தின் சார்பாக

ஒப்பம் : சல்மான் குர்ஷித்
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்

இந்திய அரசின் சார்பாக

10- 58

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.